# விடுதலைப்புலிகள்

குரல்: 24 | ஆடி 1991 | அன்பளிப்பு: 8/-


# ஆனையிறவு படைத்தளம் மீது ஒரு முற்றுகைப் போர்

வடதமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு இராணுவத்தளத்தைச் சூழ கடும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஐந்து முகாம்களைக் கொண்டதாக விளங்கும் இந்த இராணுவத்தளத்தை அழித்தொழிக்கும் முயற்சியில் ஆயிரத்துக்கும் அதிகமான புலிவீரர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேசமயம் வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப் பகுதிகளில் கடல்வழியாகப் படையினர் தரையிறக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆனையிறவுப் போர் விரிவாக்கம் கண்டுள்ளது.

இப்போரில் இதுவரை 150ற்கும் மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

கடந்த 10-ம் திகதி அதிகாலை 4-00 மணிக்கு சரமாரியான 'பசீலன்' எறிகணைத் தாக்குதலுடன் ஆனையிறவு முற்றுகைப்போர் ஆரம்பித்துவிட்டது.

இந்த ஆனையிறவுப்போர் நாம் முன்னர் வெற்றிகொண்ட கோட்டை, கொக்காவில், மாங்குளம் சண்டைகளைவிட இராணுவ - பூகோள பரிமாணங்களில் வேறுபட்டுள்ளது. சிக்கல் நிறைந்தது.

கோட்டை, கொக்காவில், மாங்குளம்,கொண்டைச்சி,மன்னார் பழைய பாலம், கும்புறுமுனை, குச்சவெளி, கல்குடா போன்றவைகள் அனைத்தும் இராணுவமுகாம்கள் என்ற பரிமாணத்துக்குள் அடங்குபவைகள் ஆகும்.

அதாவது. ஒரு சிறிய நிலப்பரப்பில் சில பத்து அல்லது சில நூற்றுக்கணக்கான படைவீரர்களைக் கொண்டிருக்கின்றன. இந்த முகாம்களில் சிறப்புக் கனரக ஆயுதங்களான நீண்ட தூரம் பாயும் ஆட்டிலறிகள், கவசவாகனங்கள், பீரங்கி வண்டிகள், நீண்ட தரைப் பாதைகள், விமான இறங்கு தளங்கள் என்பன இருக்கமாட்டாது.

சில சந்தர்ப்பங்களில் மட்டும் இவற்றுள் ஒரு சிலவற்றை கொண்டதாக முகாம்கள்இருக்கும்.

ஆனால் இராணுவதளம் என்பது பெரும்பாலும் மேற்குறித்த வசதிகள் அனைத்தையும் கொண்டிருக்கும்.ஒரு இராணுவ தளத்துக்குள் பல இராணுவ முகாம்கள் இருக்கும். பல நூற்றுக்கணக்கில் படையினர் இருப்பர். பெரிய நிலப்பரப்பொன்றை தன்னுள் அடக்கிவைத்திருக்கும். இந்த வகையில் ஆனையிறவுஒருஇராணுவ தளமாகும்.

ஆனையிறவுஇராணுவதளம் ஐந்து முகாம்களைக் கொண்டிருக்கின்றது.

கடந்த யூன் மாதம் 10-ம் திகதி சிங்களப்படைகளுடனான போர் தொடங்கியதிலிருந்து அதேவருடம் யூலை மாதம் 21ம்திகதி(21-07-1990 வரை ஆனையிறவு ஒரு இராணுவ முகாமாகவே இருந்தது. தற்போதைய ஆனையிறவுஇராணுவத் தளத்தின் ஒரு பகுதியாக இருக்கும் ''நடை முகாம்'' பகுதிதான் அப்போதைய ஆனையிறவு இராணுவமுகாம் ஆகும்.


21-07-1990 அன்று கிளிநொச்சியை நோக்கி சிங்களப் படைகள் நடாத்தியதொரு பாரிய இராணுவ நடவடிக்கையின் பின்னர் ஆனையிறவு ஒரு தளமாக மாற்றப்பட்டுவிட்டது.

இப்பொழுது, நடைமுகாம், உல்லாசவிடுதி முகாம், பாடசாலை முகாம், உப்பள அலுவலக முகாம், உப்புக்கூட்டுத் தாபன முகாம் என ஐந்து முகாம்களை ஆனையிறவு இராணுவத்தளம் கொண்டிருக்கிறது.

எனவேதான் ஒரு இராணுவ முகாமை தகர்த்தெறிய நாம் செலுத்துகின்ற உயிர் விலையை விட இந்தத் தளத்தை அழித்தொழிக்க அதிக உயிர் விலையைச் செலுத்தவேண்டியிருக்கும்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் முதலாவது மரபுவழிப் போர் அணி
# சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணி



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது முதலாவது சிறப்புப் படையணி ஒன்றைப்பெற்றெடுத்துள்ளது. இதற்கு ''சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி '' எனப் பெயர் சூட்டியுள்ளோம்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப் படையணியின் பிறப்பு எமது விடுதலை இராணுவத்தின் உயர் வளர்ச்சி ஒன்றைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

இது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு சரித்திர நிகழ்ச்சியாகும்.

பயிற்சி, தந்திரம், துணிவு, வெற்றி என்ற தலைவர் பிரபாகரனது வார்த்தைகளை தாரகமந்திரமாக இப் படையணி கொண்டுள்ளது.

இச் சிறப்புப்படையணியின் பிறப்பை உலகிற்குப் பிரகடனப் படுத்துவதுடன் அன்பிற்குரிய எமது மக்களுக்கும் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஒரு சில இளைஞர்களுடன் - ஒரே ஒரு ஆயுதத்துடன் - தலைமறைவு போராட்ட சக்தியாக இருந்த எமது விடுதலை இயக்கம் இன்று போர்த்திறனிலும், வீர உணர்விலும், நவீன ஆயுதங்களைக் கையாளும் ஆற்றலிலும் கைதேர்ந்த ஒரு மரபுவழி இராணுவமாக பரிணாமம் கண்டுவருகின்றது.

ஆரம்பநாட்களில் தலைமறைவு போராட்ட சக்தியாக இருந்தபடி ஒரு சிறிய கெரில்லா ( கரந்தடி ) அணியொன்றை உருவாக்கப் பாடுபட்டோம்.

10 அல்லது 15 பேர்களைக் கொண்ட சிறிய அணியொன்றை உருவாக்கி அதற்குத் தேவையான பயிற்சியையும் தந்திரத்தையும் வகுத்துச் செயற்பட்டோம்.

அந்தக் காலத்தில் எதிரியானவன் எமது மண் மீது ஒரு இராணுவ ஏகபோகத்தை வைத்திருந்தான். இதைக் கருத்திற் கொண்டு எமது தந்திரத்தையும், படைநகர்வையும் ஆக்கிக் கொண்டோம்.

தாக்கும்போது காட்டிய விரைவை தலைமறைவாகும் போதும் கடைப்பிடித்தோம்

(5 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

புலிகளின் குரல்

# ஆனையிறவுப் போரின் வரலாற்று முக்கியத்துவம்

சில போர் நிகழ்வுகள் ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றையே திசை திருப்பும் முக்கியத்தைப் பெற்றுவிடுவதுண்டு. இப்படியானதொரு வரலாற்று முக்கிய நிகழ்வுதான் ஆனையிறவு முற்றுகைப் போர்.

ஆனையிறவுப் பிரதேசம் பூகோளரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. இப் பகுதி யாழ்ப்பாணக் குடாநாட்டை தமிழீழத்தின் பெருநிலப்பரப்புடன் இணைக்கும்பாலமாக அமையப்பெற்றது. தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாட்டிற்கு ஆணிவேரானது.

இந்தப் பூகோள கேந்திர முக்கியத்துவத்தை நன்குணர்ந்துதான் எமது எதிரியானவன் இருபது ஆண்டுகளுக்கு முன்னரே இங்கு ஒரு இராணுவ முகாமை நிறுவினான். பூகோளரீதியாகப் பார்க்குமிடத்து ஆனையிறவு இராணுவ முகாம் வட தமிழீழத்தின் தொண்டைக்குள் திணிக்கப்பட்ட ஒரு முள் போல அமையப்பெற்றிருக்கிறது.

இந்த முள்ளைப் பிடுங்கி எறிய வேண்டும் என்பது எமது விடுதலை இயக்கத்தின் நீண்டகால அபிலாசைகளில் ஒன்று.

சென்ற ஆண்டு, யூனில் தமிழீழ-சிறிலங்கா போர் மூண்டதைத் தொடர்ந்து சிங்கள அரசு அவசர அவசரமாக ஆனையிறவு முகாமைப் பலப்படுத்தியது. கிளிநொச்சி முகாம் படையினர் ஆனையிறவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதோடு உப்பளப் பகுதி உள்ளடங்கியதாக ஆனையிறவு பிரதான பாதையையும் உள்வாங்கி, புதிய பல காவல் அரண்களோடு மூன்று மைல் தூரம் நீண்ட இராணுவததளமாக இது விரிவாக்கம் செய்யப்பட்டது.

போர் ஆரம்பமான காலத்திலிருந்தே ஆனையிறவுப் பிரதான பாதை மூடப்பட்டது. தமிழ் மக்களின் போக்குவரத்தைப் பெரும் சிரமத்திற்கு உள்ளாக்கி, தமிழர் மீதான பொருளாதாரத் தடையை இறுக்குவதற்கும், புலிகளின் நகர்வுகளை கட்டுப்படுத்தவும் ஆனையிறவு இராணுவத்தளம் மையமாகச் செயற்பட்டது. இதனால் எமது மக்கள் எதிர்கொண்ட துன்பத்தை நாம் இங்கு விபரிக்கத் தேவையில்லை.

தமிழரின் பொருளாதார வாழ்வை நசுக்கிக்கொண்டு, தமிழீழத்தின் நிலக்கழுத்தைத் திருகியவண்ணமிருந்த ஆனையிறவு இராணுவத் தளத்தைத் தகர்த்தெறியும் நோக்கத்தோடு எமது இயக்கம் போர் தொடங்கிய காலத்திலிருந்தே இவ் இராணுவத்தளம் மீது முற்றுகை வலையை விரித்தது. இந்த முற்றுகையை முறியடிக்க இராணுவம் பல தடவைகள் முயற்சித்தது. ஆனால் புலிகளின் வீராவேச எதிர்த்தாக்குதல்கள் காரணமாக இராணுவம் தளங்களுக்குள் முடங்கிவிட நேரிட்டது. இந்த நீண்ட முற்றுகைப் போர் படிப்படியாகத் தீவிரமடைய இராணுவமும் தனது படை பலத்தைப் பெருக்கிக்கொண்டது. அதற்கு ஈடாக புலிகளும் தமது முற்றுகைப் பிடியை இறுக்கிக் கொண்டனர்.

இந்த முற்றுகைப் போர் இம்மாதம் 10ந் திகதி ஒரு முழு அளவிலான யுத்தமாக வெடித்தது. பெரும் படை பலத்துடன் நவீனரக ஆயுதங்களுடன் புலிகள் நடாத்திய கடுமையான தாக்குதலினால் ஆனையிறவு இராணுவத்தளம் ஆட்டம்கண்டது. உப்பளப்பகுதி காவல் அரண்கள் பல புலிப் படையணிகளிடம் வீழ்ந்தன. சிங்கள இராணுவம் சுற்றிவளைக்கப் பட்டது.

புலிகள் இயக்கம் இம்முறை களத்தில் இறங்கிய நவீனரக பேராயுதங்கள். சிங்கள இராணுவத்தை நிலைகுலையச் செய்தது. ஆகாயப் படையும் வெருண்டு ஓடியது. இதுவரை காலமும் தமிழீழ வானை ஆக்கிரமித்து பேயாட்டம் ஆடிவந்த விமானக் கழுகுகளின் சிறகுகள் உடைக்கப்பட்டன. இராட்சதத் தும்பிகள் தரையிறங்க முடியாது அண்டவெளியில் அங்கலாய்த்தன.

ஆனையிறவு இராணுவத்தினருக்கு ஆகாயத்திலிருந்து பெறப்பட்ட உணவு, ஆயுத விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டது. இதனால் முற்றுகைப் போர் என்றுமில்லாத வகையில் பயங்கரமாக இறுகியது. செத்து அழுகிய பிணங்களையும், காயப்பட்டு குற்றுயிராய் செத்துக் கொண்டிருப்பவர்களையும் அப்புறப் படுத்த முடியாது இராணுவம் திண்டாடியது.

இதற்கிடையில் புலிப்படை சிங்களப் பாசறையின் மையத்தை நெருங்கி விட்டது. வரலாற்றில் முதற்தடவையாக 800 வீரர்களைக்கொண்ட ஒரு சிங்களப் படையணி புலிகளின் பொறியில் செம்மையாக மாட்டிக் கொண்டது.

இதுவரை காலமும் புலிகளுக்கு எதிரான போர்பற்றி புராணக் கதைகளைக் கூறி சிங்கள தேசத்தை ஏமாற்றிவந்த பிரேமதாசா அரசுக்கு ஆனையிறவு முற்றுகை ஒரு பெரிய சவாலாக எழுந்தது. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பெரியதொரு இராணுவத் தளத்தையும் பறிகொடுத்து, பல நூற்றுக்கணக்கான வீரர்களையும் பலிகொடுத்து ஒரு பாரிய இராணுவத் தோல்வியை சந்தித்தால் சிங்கள தேசத்தில் அதன் எதிர்வீச்சுகள் பாரதூரமாக அமையும் என்பதை அரசு உணர்ந்துகொண்டது.

உடனடியாகவே ஆனையிறவை மீட்கும் இடர்காப்பு படையெடுப்பு ஒன்றில் குதித்து. கடல்மார்க்கமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட படைவீரர்கள் வடமராட்சி கிழக்குக் கடலோரம் குவிக்கப்பட்டனர். வெண் மணற்திடல்களைக் கொண்ட இந்தப் பரந்தவெளிப் பாலைவனத்தில் புதிய யுத்த அரங்கு திறக்கப்பட்டது.

ஆனையிறவு இராணுவத்தளம் மீதான முற்றுகையைச் சிறிதளவும் நெகிழ்த்தாமல் பயங்கரப் பாலைவனப் போரையும் எதிர்கொள்ள புலிப்படை நிர்ப்பந்திக்கப்பட்டது. ஆழ் கடலும், நீண்ட பரந்த நிலப்பரப்பும், ஆகாயமுமாக புதிய பரிமாணங்களில் ஆனையிறவு முற்றுகைப் போர் விரிவாக்கம் கண்டது.

தமிழீழ விடுதலைப் போர் ஒரு மரபுவழி யுத்தமாக பரிணாம முதிர்ச்சி கண்டிருப்பதற்கு ஆனையிறவுச் சமர் ஒரு சிறந்த உதாரணமாக அமைகிறது. படையணிகளின் சீரமைப்பு, போர்முறைத் தந்திரோபாயம், தாக்குதல் திட்டம், ஆயுதக் கையாள்வு ஆகிய அம்சங்களில் புலிகள் இயக்கம் அபாரமான வளர்ச்சிகண்டிருப்பதை ஆனையிறவு போர் வெளிக்காட்டத் தவறவில்லை.

புலிகளின் புதிய முறைத் தாக்குதலுக்கு ஆனையிறவு இராணுவத் தளம் தாக்குப்பிடியாது என்பதை உணர்ந்துதான் சிங்கள அரசு இடர்காப்பு நடவடிக்கையாக பெரும் படையெடுப்பையே நடாத்துகிறது. புதிய போர் அரங்கு ஒன்றைத் திறந்துவிட்டால் புலிகளின் தாக்குதல் வேகத்தை தணித்து முற்றுகைப்போரை திசைதிருப்பிவிடலாம் என்பது அரசின் கணிப்பு. ஆனால் எந்தவொரு நெருக்கடி நிலைமையையும் சமாளித்து வெல்லும் போர்த் திறனும் மனவுறுதியும் புலிகளிடம் உண்டு என்பதை அரசாங்கம் விரைவில் உணர்ந்துகொள்ளும்.

ஆனையிறவு முற்றுகைப் போர் படிப்படியாகத் தீவிரமடைந்து இரு நாடுகள் மத்தியில் நிகழும் பகைமைப் போர் போன்று ஒரு காத்திரமான வடிவத்தை எடுத்து வருகிறது. ஆனையிறவு இராணுவத் தளத்தை தகர்த்தெறிய வேண்டும் என்ற புலிகளின் திடசங்கற்பமும், அதனை எப்படியாவது மீட்டெடுக்கவேண்டுமென்ற அரசின் உறுதிப்பாடும் இந்தப் போரை மிகவும் ஆக்ரோசமானதாக உருமாற்றியிருக்கிறது. தமிழரின் தாய்மண்பற்றும் - அரசின் இனவாத ஆதிக்க வெறியும் போர்க்கோலம் கொண்டு மோதுவதால் இந்தப்போர் தமிழீழம் இதுவரை கண்டிராத மாபெரும் அறப்போராக வளர்ச்சியும், உயர்ச்சியும் கண்டிருக்கிறது.

இந்தப் போர் தமிழீழ மக்கள் மத்தியில் என்றுமில்லாத ஒரு புதிய எழுச்சியை தோற்றுவித்துள்ளது. நீண்டகாலமாக சோர்ந்துபோய், பயந்துபோய், நொய்ந்துபோயிருந்த தமிழ் மக்கள் மத்தியில் அலாதியான ஆர்வமும், உணர்ச்சி வேகமும் பிரவாகமெடுத்துவருவது இந்தப் போரின் புதிய பரிமாணம் எனலாம். இன்று தமிழ்த் தேசம் முழுவதுமே புலிகளுக்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கிறது. இதற்கு காரணமும் இல்லாமல் இல்லை.

நீண்ட, நெடுங்காலமாக முடிவில்லாமல் இழுபட்டுவரும் தேசியப் பிரச்சனை, தொடர்ச்சியாக தீவிரமடைந்துவரும் இராணுவ அடக்குமுறை, திட்டமிட்ட பொருளாதார சீரழிப்புக் கொள்கை, இந்த நெருக்குதல்களால் படுமோசமாகிவரும் வாழ்க்கைப் பிரச்சினை - இவையெல்லாவற்றிற்கும் தொடர்ச்சியாக முகம் கொடுத்து பொறுமையிழந்த ஆவேசம் தமிழ் மக்களை சிங்கள ஆளும் வர்க்கம்மீது கொதித்தெழச் செய்திருக்கிறது.

எதிரிமீதான இந்தக் கொதிப்புணர்வும், போராடினால்த் தான் விடிவுண்டு என்ற விழிப்புணர்வும், புலிகளின் இலட்சியப்போரில் எழுந்த பற்றுணர்வும் ஒன்றுதிரண்ட ஒரு புதிய வேகம் மக்களை ஈர்த்திருக்கிறது. ஆனையிறவு முற்றுகைப் போர் இந்த உணர்வு வேகத்திற்கு ஒரு வெளிப்பாட்டுக் களமாக அமைந்திருக்கிறது. புலிகளின் விடுதலைப் போர் ஒரு மக்கள் யுத்தமாக உயர் வடிவம் பெறும் என்பதற்கு இது ஒரு நம்பிக்கையூட்டும் அறிகுறியாகும். இன்று லட்டுகள், முட்டை மா உருண்டைகள், முறுக்குகள், எள்ளுப் பாகுகளைச் செய்து எமது போராளிகளின் பசி தீர்க்கும் அன்புக் கரங்கள், நாளை ஆயுதங்கள், வெடிமருந்துகள், எறி குண்டுகளை உற்பத்தி செய்துதரும் வீரக் கரங்களாக மாறிவிடும் என்பது திண்ணம்.

ஆனையிறவு முற்றுகைப் போர் இப்படியானதொரு மாபெரும் வரலாற்றுத் திசை திருப்பத்திற்கு வழிகோலும் முக்கிய போராட்ட நிகழ்வாக அமையும்.

ஆனையிறவு ஒரு போர்க் களம் மட்டுமல்ல. தமிழீழ தேசிய எதிர்ப்பியக்கத்தின் ஒரு வரலாற்றுச் சின்னமாகவும் அது திகழப்போகிறது. அந்த வரலாற்றைத்தான் ஆனையிறவில் புலிப்படை வீரர்கள் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

www.eelamview.com

# தனியரசு அமைப்பதற்கு வலுவான பொருளாதார அடித்தளம் அவசியம்

தமிழீழத் தனியரசை அமைப்பதற்கு ஒரு வலுவான பொருளாதார அடித்தளம் அவசியமாகும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித்தலைவரும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவருமான எடுத்துரைத்தார்.

*சமீபத்தில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பனைவள ஆய்வரங்கில் உரையாற்றிய தனியரசுக்காக நாம் போராடும் அதேவேளை தன்னிறைவான பொருளாதார கட்டுமானத்தை அமைப்பதற்காகவும் போராட வேண்டும் என வலியுறுத்தினார்.*

*தொடர்ந்து பேசுகையில், "இன்று சிங்கள தேசம் எம்மீது விதித்துள்ள பொருளாதாரத்தடை என்பது நாங்கள் எமது தேசத்து பொருளாதார வாழ்வை கட்டிஎழுப்ப எங்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகக் கருதவேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.*

யாழ் பல்கலைக்கழகவிஞ்ஞான மன்றமும், பனை தென்னைவள அபிவிருத்தி ஒன்றியமும், பனை அபிவிருத்திச்சலையும், வடமாகாண தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் இணைந்து நடாத்திய பனைவள கண்காட்சியை திரு திறந்துவைத்தார். இதனை அடுத்து நடந்த ஆய்வரங்கில், அவர் பேசியபோது கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்.

"எங்கள் தேசத்திற்கு தேவையானதை நாமே உற்பத்தி செய்ய வேண்டும், எங்கள் தேசத்தில் விளைவதையே நாங்கள் உணவாகக் கொள்ளவேண்டும். நாம் எல்லோரும் ஒன்றிணைந்து தங்கு நிலையிலிருக்கும் எங்கள் பொருளாதாரத்தை விடுவிக்க போராட வேண்டும்."

"இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப, எமது இயற்கை வளங்களை இனங்கண்டு ஓர் சுயபூர்த்தியான பொருளாதார வடிவத்தை இன்று நாம் கட்டியமைக்க வேண்டும். நாளைய தமிழீழ தேசத்தின் தன்னிறைவான பொருளாதார அமைப்பிற்கான வழிகாட்டியாக இந்த வடிவம் அமையவேண்டும்."

"பனைவளம் என்பது, வட தமிழீழத்திற்கு இயற்கை தந்த வரமாகும். ஒரு காலத்தில் பனையின் பயன்கள் எங்கள் மக்களின், ஒரு பகுதி வாழ்வுத் தேவையை நிவர்த்திசெய்தன. ஆனால், இன்று எங்கள் தேசம் முழுவதும், நிறைந்து, பரவிப் போய்க்கிடக்கும் பனையின் பலாபலன்களை நாம் பயன்படுத்தாது விடுகின்றோம்."

"இந்தநிலை மாறவேண்டும். பனையின் பயன்களை எங்கள் பொருளாதார நிவர்த்திக்காக நாம் பயன்படுத்த வேண்டும். அதற்குரிய திறவுகோலாக - வழிகாட்டியாக. இந்தப் பனைவள கண்காட்சியும் ஆய்வரங்கும் பயன்பட வேண்டும்." என்று குறிப்பிட்டார்.

# செஞ்சோலை

## சிறுவர் பராமரிப்பு நிலையம்

செஞ்சோலை — விடுதலைப் புலிகள் மகளிர் அணியின் சிறுவர் பராமரிப்பு நிலையம். உண்மைதான், அது ஒரு சோலைக்குரிய வாசல் தான். இனிய கனவுகளை ஏந்திய படி சிறகடிக்கும் அந்தக் குழந்தைப் பறவைகளின் வாசமே இனித்தது.

அழகழகான அந்தச் சிட்டுக் குருவிகள் ஏன் இங்கு வந்தார்கள் இந்த மண்ணின் சோகங்கள் இவர்களையுமா இலக்கு வைத்தது இந்த உலகில் ஏன் இவர்கள் நிர்க்கதியானார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு ஏன் சில மாதங்களுக்கு முன்பு கூட, வெயில் தணியும் மாலை வேளைகளில், இவர்களும், அப்பாவின் கையைப் பிடித்த படியே, கண்சிமிட்டும் வண்ணத்துப் பூச்சியை தாவிப்பிடிக்கப் பாய்ந்திருப்பார்கள். கண்ணுக் கெட்டாத் தூரத்தில், வானத்தில் நிற்கும் வட்ட நிலாவைப் பிடித்துத் தா, என அடம் பிடித்திருப்பார்கள்.

இவர்களை இங்கு அனுப்பியது யார்.?

தென் தமிழீழத்தில், அகதி முகாம் வாசலொன்றில் வைத்து தங்களின் அப்பாவையும், அம்மாவையும் சிங்கள இராணுவத்திடம் பறி கொடுத்து வந்தவர்கள் இவர்கள். வட தமிழீழத்தின் வாசலொன்றில் பதிந்த விமானமொன்றின் குண்டுச் சிதறல்களுக்கு அப்பாவையும், அம்மாவையும் பலி கொடுத்து நின்றவர்கள் இவர்கள். இன்னும், இன்னும், இந்தத் தேசத்தின் நிகழ்வுகளால் தனித்து விடப்பட்டவர்கள் இந்தப்பிள்ளைகள்.

இவர்கள் இந்த மண்ணின் புதல்வர்கள், விடுதலைப் போராட்டத்தின் விளைவுகளாகத் தோற்றம் பெற்ற இவர்கள் இந்தத் தேசத்தின் குழந்தைகள், இவர்களை அரவணைப்பதும், அணைத்து வளர்ப்பதும், தமிழ்த் தாய் பெற்றெடுத்த ஒவ்வொரு மைந்தர்களுக்கும் என விதிக்கப்பட்ட கடமை.

செஞ்சோலை மாணவிகள் இன்று உற்சாகத்துடன், உலகத்தை வென்று விடும் ஆர்வத்துடன் இருக்கிறார்கள், அவர்களின் விழிகளில் இப்போது ஏக்கங்கள் தெரியவில்லை, மலர்ச்சியும், ஆவலுமே தெரிகிறது.

அந்த நிறுவனத்தின் நிருவாகியான மகளிர் அணியைச் சேர்ந்த ஜனனி சொல்கிறார்.

"எங்கள் மாணவர்களுக்கு நாங்கள் செயல் முறைக் கல்வியை கொடுக்கவே விரும்புகின்றோம். எங்கள் கல்வி முறை இந்தத் தேசத்தை நேசிக்கின்றதாகவே இருக்கும். இங்கு உள்ள மாணவிகள் கல்வியுடன் தங்கள் வருங்கால வாழ்க்கைக்கான தொழிலையும் கற்றுக் கொள்ள வேண்டும் என விரும்புகின்றோம்.

செஞ்சோலை நிறுவனம், தமிழினத்தை நேசிக்கின்ற — இந்த மண்ணை விசுவாசிக்கின்ற, தமிழுணர்வு உள்ள சமூகம் ஒன்றைத் தோற்றுவிக்கும். அத்துடன் நாளைய சமூகத்தினுடைய புத்தி ஜீவிகளையும் இந்த நிறுவனம் தர விரும்புகிறது." என்றார்.

அந்த நேரத்தில் தான் அமுதினி வந்து கொண்டிருந்தாள். 4½ வயது நிரம்பாதவள். வந்ததும் ஜனனியுடன் ஒட்டிக் கொண்டே, செல்லக் கதைகள் சொல்கின்றாள். அவ்வளவு நேரமும் கவனிக்காமல் கையில் கிடந்த சின்னக் காயத்தை, வலியுடன் தூக்கிக் காட்டுகிறாள். அவளை நேசிக்க — இன்று அவளுக்காக அன்பு செலுத்த ஆட்கள் இருக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. அவளுக்கு மட்டுமல்ல அங்கிருக்கும் எல்லாக் குழந்தைகளுக்குமே தங்களை நேசிக்க, அக்கறையுடன் கவனிக்க ஆட்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது இந்த அன்புக்காகவும் பாசத்திற்காகவும் தான் அவர்கள் இவ்வளவு நாளும் காத்திருந்தார்கள்.

செஞ்சோலையின் பராமரிப்பாளர்களாக, புலிகளின் சீருடையுடன் மகளிர் அணியினரும் நின்றார்கள், மகளிர் அணியினரால் உள்வாங்கப்பட்ட தொண்டர்களும் நின்றார்கள். எல்லோருமே ஓர் அன்பு வலைக்குள் சிக்குப்பட்டு சுற்றிச் சுழன்று கொண்டிருந்தார்கள். அவர்களால் இந்தக் குழந்தைகளை, எப்படி அளவு கடந்து நேசிக்க முடிகிறது. வரிப்புலி உடையை இழுத்து விட்ட படியே ஒரு பெண் சொல்கின்றாள்.

"நாங்கள் இந்தத் தேசத்தைச் சேர்ந்தவர்கள், இந்த மண்ணில் பிறந்தவர்கள். இவர்கள் எங்களது செல்வங்கள். எங்கள் தேசத்தின் போராட்ட வாழ்வு தந்த பிள்ளைகள். இவர்களை அரவணைப்பது எங்கள் ஒவ்வொருவரதும் கடமை, நாங்கள் இதைச் சேவையாக கருதவில்லை, இது எங்கள் வாழ்வின் இலட்சியம்' என்றாள், தமிழீழ சமூகத்தின் வருங்கால சந்ததி உயர்வானதாக வளர வேண்டும் என்பதில் அவர்களுக்கிருக்கும் ஆவல் அதிசயிக்கத் தக்கதாக இருந்தது.

இந்தப் பிள்ளைகளுக்காக — இந்தப் பிள்ளைகளின் வாழ்வுக்காக. எதையுமே செய்யக் காத்திருக்கும் அந்தப் பெண்களும் உண்மையில் உயர்வானவர்களே.

செஞ்சோலை பிள்ளைகளின் நேரடிப் பராமரிப்பாளராக இருபத்தாறு வயது நிறைந்த மாயா இருந்தார். அமைதியாக, எந்த நேரமும் சிரித்த முகத்துடன் அந்தப் பிள்ளைகளுக்கு நடுவே நின்றார் அந்தப் பெண்.

ஒரு பதின் மூன்று வயதுச் சிறுமி வந்தாள். ஓர் பாசமிக்க அன்னையின் அரவணைப்பிலிருந்து வருவது போல் அவள் அழகாகவும் சீராகவும் இருந்தாள். முகத்தில் மகிழ்ச்சியும் — குறும்பும் துடித்தன. மாயா அக்காவைப் பற்றிக் கேட்டதும், அவள் முகம் கனிவாக மாறிக்கொண்டது.

"ஒரு தாயிடமிருந்து பிரிந்து இன்னொரு தாயிடம் நாங்கள் வந்துள்ளோம். மாயா அக்கா எங்களுக்கு அக்கா இல்லை. ஓர் அம்மா" என்று பெரிய ஆள் மாதிரிச் சொன்னாள் அந்தச் சிறுமி.

இந்தக் குழந்தைகளை தங்கள் சுய நலத்திற்காக பயன் படுத்த நிற்கும் தீய சக்திகளிடமிருந்து (இவர்களை) காப்பாற்ற வேண்டும் இவர்களுக்கு ஓர் வளமான வாழ்க்கையை அமைத்து, இம் மண்ணின் சிறந்த மனிதர்களாக மாற்ற வேண்டும். என்ற இலட்சிய நோக்குடன் இயங்கும் செஞ்சோலை நிறுவனம் தமிழீழ மக்களிற்கும் ஓர் வேண்டுகோளை விடுகிறது,

"செஞ்சோலையை இந்தத் தேசத்தின் நிறுவனமாக நினையுங்கள். இவர்களை உங்களின் பிள்ளைகளாக நேசியுங்கள். இவர்களின் நல் வாழ்வுக்காக எங்களுடன் சேர்ந்து உழையுங்கள்" என்பது ஆகும்.

செஞ்சோலை மாணவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் மிகவும் நேசிக்கிறார்கள். ஓர் புரிந்துணர்வுடன் நடந்து கொள்கிறார்கள். எல்லாக் குழந்தைகளும் செய்வது மாதிரி சில சின்னத் தவறுகளிற்கும் — குழப்படிகளிற்கும் இவர்கள் விதிவிலக்கானவர்கள் அல்ல. ஆனாலும், நாளை

செஞ்சோலை மாணவி ஒருத்தி இந்தத் தேசத்தின் உயர்ந்த மாணவியாக இருப்பாள். இந்தத் தேசத்தை நேசிப்பாள் இந்தத் தேசத்தின் வாழ்வுக்காகவே வாழ்வாள்.

www.eelamview.com

# மேஜர் சுருளி






**மேஜர் சுருளி**

**(கந்தசாமி சிறீதரன்)**

**சுதுமலை.**

பிறப்பு: 14-9-1960

வீரமரணம்: 30-5-1991

இராணுவ வாகனங்கள் யாழ். நகர வீதிகளில் அரக்கத்தனமாக - வலம் வரும் காலம், ஒளிந்தும், மறைந்தும் புலிகள் இயங்கிய நாட்கள் இரவு வருவதற்காக போராளிகள் காத்திருப்பார்கள். இரவுக்காக காத்திருக்கும் புலிகளில் சுருளியும் ஒருவன்.

அவனது போராட்ட வாழ்வு பெரும்பாலும் இரகசியம் நிறைந்ததும், மறைவானதுமாகவே இருந்தது.

அன்றைய இரவுகள் மிகப் பயங்கரமானவை, எந்த வீதியிலும், எங்கும் இராணுவ நாய்கள் வாய்பிளந்து நிற்கும், சில நேரங்களில் இரவின் அமைதியை துப்பாக்கிகளின் வேட்டுக்கள் கலைக்கும்.

ஒரு போராளியோ, அல்லது ஏதாவதொரு வேலைக்குப் போன தமிழ்மகனோ வீதியை முத்தமிட்டுக் கிடப்பான்.

சுருளி இயக்கத்திற்குள் தன்னை இணைத்துக் கொண்டதுமே அவனுக்கு கிடைத்த வேலை, எமது இயக்கத்தின் பெறுமதிமிக்கவையான இராணுவ தளபாடங்கள், ஆவணங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பே ஆகும். அந்த நேரங்களில், எம்மிடமிருந்தவையே சில ஆயுதங்கள் தான். அவற்றை இழந்துவிட நாம் ஒருபோதும் தயாராக இல்லை ஏனென்றால், எங்கள் விடுதலைப்போராட்டத்தை வளர்த்தெடுக்கும் உன்னதமான கருவிகள் அவை. அவற்றைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு போராளியும் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தான். அப்படிப் பட்டதொரு பொறுப்பான வேலைதான் சுருளிக்கும் கிடைத்தது.

பண்டிதர் அண்ணை தான் அந்த நாட்களில் இயக்கத்தின் பல்வேறு வேலைகளுக்கும் பொறுப்பாக நின்று செயற்பட்டுக் கொண்டிருந்தார். அந்த நெருக்கடிமிகுந்த நேரங்களில் பண்டிதர் அண்ணைக்கு உறுதுணையாக நின்று செயற்பட்டவர்களில் சுருளியும் ஒருவன். பண்டிதருக்கு சுருளி ஒரு செல்லப்பிள்ளை. பண்டிதர் அவனில் மிகுந்த அன்பை வைத்திருந்தார் அதே நேரம் பெரும நம்பிக்கையையும் வைத்திருந்தார். அவரின் கைகளிற்குள் நின்று சுற்றிச்சுழன்று வேலைசெய்தவன் சுருளி. அவரின் கைகளிற்குள்ளேயே வளர்ந்தவன். அவனைப் போன்ற இரவுப் பறவைகளின் பறப்புகள் தான் இயக்கத்தை காத்தது. போராட்டத்தை வளர்த்தது.

இயக்கத் தளபாடங்களை பாதுகாத்தல் என்பது இலகுவான தொன்றல்ல, மிகவும் கடினமான பணி, இரவு முழுவதும் ஆந்தை மாதிரி கண் விழித்து வேலை செய்ய வேண்டும். மழையிற்கும், வெயிலுக்கும் பாதுகாக்க வேண்டும். அதே நேரம் எதிரியின் கழுகுக் கண்களிற்கும் மறைக்க வேண்டும். இதில் ஏற்படும் சின்னத் தவறு கூட இயக்கம் ஓர் ஆயுதத்தை இழக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தலாம்.

சுருளி எவருடனுமே இலகுவாகப் பழகுவான், அவர்களின் நம்பிக்கையைப் பெற்று விடுவான். அவனது அந்த இயல்பே அவனுக்கு வழங்கப்பட்ட வேலைக்கு பெரும் உதவியாக இருந்தது. அவனுடைய தோழர்கள் அவனைக் கேலி செய்வதுண்டு, எப்பவுமே சிரித்தபடி திரிகிறாயடா என்று, கள்ளங் கபடமற்ற இந்தப் பிறவி ஓர் உயர்ந்த போராளியாக வாழ்ந்தான்.

அந்த நேரத்தில் தான் ஒரு கடுமையான சுற்றிவளைப்பிற்கு உட்பட்டு பண்டிதர் அண்ணையும், எங்களின் சில தோழர்களும் வீரமரணத்தை சந்தித்தார்கள். பண்டிதர் அண்ணையின் வீரமரணம் சுருளியை நன்றாகவே பாதித்தது. இயக்கத்திற்கு வந்தநாள் தொடக்கம் பண்டிதருக்கு பக்கத்திலேயே திரிந்த அவனால் அவரின் இழப்பை தாங்க முடியாமலிருந்தது. அன்று தொடக்கம் எத்தனையோ இரவுகளில், பண்டிதரின் நினைவுகள் இவனது விழிகளை நனைத்திருக்கிறது.

பண்டிதரின் வேலைகளை மேஜர் அல்பேட் பொறுப்பெடுத்த பொழுது, அல்பேட்டுடன் இணைந்து சுருளியும் வேலைகளைச் செய்தான். யாழ். பொலிஸ் நிலையத்தின் மீது புலிகள் தாக்குதலை நடாத்திய பொழுது அல்பேட்டின் தலைமையில் சுருளியும் கலந்துகொண்டான் அந்த நேரங்கள் தான், இராணுவ முகாம்களை நாம் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த காலம். அச்சந்தர்ப்பங்களில் பல தாக்குதல் நடவடிக்கைகளில் சுருளியும் ஒருவனாக பங்குபற்றினான்.

o o o

சுருளி ஒரு சாதாரண சுருட்டுத் தொழிலாளியின் மகன். யாழ் மாவட்டத்தில் உள்ள சுதுமலை கிராமம் தான் அவனது பிறப்பிடம். அங்குள்ள அம்மன் கோவிலடியில் ஓடித்திரிந்து வளர்ந்த பிள்ளை அவன், கோவிலடி வீதியிலும், மழை வெள்ளக் காலங்களில் வயல் வெளிகளிலும் விளையாடித் திரிந்த இவனின் நெஞ்சத்தில் விடுதலை உணர்வும் துளிர்க்கத் தொடங்கியது.

அது ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலம், விடுதலை இயக்கம் எது, சமூக விரோதக் கும்பல்கள் எது வென பிரித்தறிய முடியாத நிலை, நரிகளெல்லாம் புலி வேசம் போட்டு நின்றன. உண்மையான விடுதலை இயக்கமொன்றுடன் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற தாகம் சுருளியில் படிந்து கொண்டது. அவனுடன் அவனது கிராமத்து நண்பர்கள் சிலரும் சேர்ந்து கொண்டனர்.

அவர்கள் தெரிந்துகொண்டதெல்லாம், தலைவர் பிரபாகரனைப் பற்றி, அவரின் வீரத்தைப் பற்றி. அவரால் வகுக்கப்பட்ட கட்டுப்பாடுகளைப் பற்றித்தான், புலிப் படையைத் தேடி அவர்கள் அலைய வெளிக்கிட்டார்கள். புலிகள் மட்டும் கண்ணுக்குத் தெரியவே இல்லை, மற்றும்படி எல்லா இயக்கத்தவர்களும் கால்களிற்குள் நின்றனர். "இயக்கத்தில் சும்மா ஆள்ப் பொலிவுக்கு சேரக்கூடாது. செயற்பட வேண்டும், ஒழுங்கும், கட்டுப்பாடும் வேணும், அதோடு விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுற உறுதியும் தீவிரத் தன்மையும் வேணும் இதை எல்லாம் பார்த்துத் தான் நாங்கள் இயக்கத்தில் சேர வேண்டும்" என்று கூறி தன் நண்பர்களை தவறான வழிகளிற்கு சென்று விடாமல் பார்த்துக்கொண்டான் சுருளி.

இறுதியில் அவன் தான் எங்கோ அலைந்து புலிகளில் ஒருவரை சந்தித்துக் கொண்டான்.

அந்த நேரங்களில் தான், ஒரு நாள், மானிப்பாய் கிராமங்களை துப்பாக்கி வேட்டோசைகள் கண்விழிக்கச் செய்தன. காலை 6 மணிக்கு. பிரயாணிகள் பேருந்தொன்றை மறித்த பச்சைப் பேய்கள் அதிலிருந்தவர்களை இறக்கி, வரிசையில் நிற்க வைத்து சுட்டுக் கொன்றனர்.

காலையில் படிப்பதற்காக வந்தமாணவர்கள், பேருந்துச் சாரதி இன்னும் பொது மக்கள் சிலர் - உடல் சிதறி உயிரற்றுக் கிடந்தார்கள். அந்த இராணுவ மிருகங்கள், இந்தச் செய்தி தெரியாது வந்த மினி பஸ் ஒன்றையும் மறித்து அதில் ஏறினர். அந்த மினி பஸ் மானிப்பாயிலிருந்து மாதகல் இராணுவ முகாமை நோக்கி ஓட வெளிக்கிட்டது அது ஓர் துயரம் நிறைந்த சம்பவம். அந்த பஸ்ஸிற்குள் இருந்த ஒவ்வொரு தமிழனும் கொடுமையாக சித்திரவதை செய்யப்பட்டான் கடப்பட்டு வீதிவீதியாக வீசப்பட்டார்கள். அந்தப் பச்சை மிருகங்களின் கோரப்பற்கள் எங்கள் தேசத்தின் வீதிகளை சிதைத்துச் சென்றன.

அந்தச் சம்பவத்தின் பின்பு, வெளியில் வாழ்வதற்கு சுருளியின் மனம் இடந்தரவில்லை, அவன் ஓர் முழுமையான போராளியாக மாறிவிட்டான். பண்டிதர் அண்ணையுடன் இணைந்து வேலை செய்யத் தொடங்கினான்.

காலங்கள் ஓடின. விடுதலைப் போராட்டம் தொடர்ந்தது. சுருளியின் தம்பிகளில் ஒருவனான ரதிதரனும் புலிகளுடன் இணைந்து கொண்டான்.

இந்தியப்படைகள் தமிழீழ தேசத்தின்மீது ஆக்கிரமிப்பை நடாத்தி, ஓர் போரைத் தொடங்கிய நேரம் எம் தேசமெங்கும் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். தமிழ்ப் பெண்களில் பலர்படுமோசமாக பாலியல் வன்முறைக்காளானார்கள். இந்த மண்ணை நேசித்தவர்கள் பலர் பிடித்துச் செல்லப்பட்டார்கள், சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்கள் தமிழீழ தேசத்தில் விலக இடமின்றி இந்தியர்கள் நிறைந்து போய் நின்றார்கள்.

அந்த நிலைகளில், ஆயுத தளபாடங்களையும், ஆவணங்களையும் பாதுகாப்பதற்காக சுருளியும் அவன் தோழர்களும் கடுமையாகப் போராடினார்கள். அந்த நாட்களில் அவர்கள் விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாத்தார்கள். அதற்காக ஆயுதங்களை பாதுகாத்தார்கள்.

சில நாட்கள் சென்றன. இந்தியப் படைகள் சுருளியைத் தேடத் தொடங்கினார்கள். சுருளியின் வீடு அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டது. போராட்டத்திற்காக இருவரைத் தந்த அவனின் குடும்பம் கொடுமையான சித்திரவதைக்காளானது. பல வருடங்களாக இருந்த பகையுணர்வை சமூகவிரோதி ஒருவன் இந்தியர்களுடன் சேர்ந்து நின்று தீர்க்கத் தொடங்கினான்.

அப்போது தான் ஒரு நாள் சுருளியின் தம்பி ரதிதரனும், அவனது தோழர்களும் இந்தியப் படைகளாலும், தேசவிரோதிகளாலும் சுற்றி வளைக்கப்பட்டார்கள். சின்னதொரு சண்டை, ரதிதரனின் உடலிலும் சிலரவைகள் பட்டன, அவனது தோழர்கள் தப்பிச் சென்றார்கள் ரதிதரனின் உயிரற்ற உடலை இந்தியச் சிப்பாய்கள் வீதியால் இழுத்துச் சென்றார்கள் இந்த மண்ணை நேசித்த போராளி ஒருவன் தேசவிரோதிகளாலும், இந்தியர்களாலும் இந்த தேசத்தின் தெருக்களின் வழியே இழுத்துச் செல்லப்பட்டான்.

இந்திய இராணுவத்தினர் இங்கு நின்ற பொழுது. சில காலம் வன்னியில் நின்ற சுருளி, மீண்டும் யாழ்ப்பாணத்தில் வந்து நின்று செயற்படத் தொடங்கினான். ஆபத்து நிறைந்த அந்த நேரங்களில் சுருளியும், அவனது தோழர்களும், மிக அவதானமாகச் செயற்பட வேண்டி இருந்தது! தேசவிரோதிகளும், இந்தியர்களும் வீதிக்கு வீதி, சந்திக்குச், சந்தி முகாமிட்டு நின்றார்கள், தமிழீழ மக்கள் இந்தியத் துப்பாக்கிகளின், முனைகளில் — நின்று — வாழ்ந்தனர்.

அந்த நேரம் தாக்குதலுக்கு தேவையான ஆயுதங்களை மறைவிலிருந்து எடுக்க வேண்டியிருந்தது. ஏனையவற்றைப் பாதுகாக்க வேண்டி இருந்தது. இதற்காக சுருளியும், அவனது தோழர்களும், நம்பிக்கையானவர்களைத் தேடி அலைய வேண்டியிருந்தது.

இந்தியப் படைகள் இந்த மண்ணை விட்டு வெளியேறிய பின்பு, புலிகளின் புலனாய்வுப் பிரிவில் இணைந்து சுருளி செயற்பட்டான்.

சுருளி கொடுக்கப்படும் எந்த வேலையையும், பொறுப்புணர்ச்சியுடன், சிறப்பாகச் செய்து முடிப்பவன். பண்டிதரிடமிருந்து இவனில் தாவிக் கொண்டதில் ஒன்று எளிமை.

தன்னைக் கவனியாது. ஒரு சைக்கிளில் கிராமத்து வீதிகளில் ஏதோ ஒரு வேலைக்காக ஓடித்திரியும் சுருளி... ஓர் வெடி விபத்தில் சிக்கினான்.

மூன்று நாட்கள், அவன் சாவுடன் போராடினான், ஆனாலும் 30. 5. 1991 அன்று மேஜர் சுருளி வீரமரணத்தைச் சந்தித்துக் கொண்டான்.

**கந்தசாமி**

**ரதிதரன்**

**சுதுமலை**

வீரமரணம் :15-10-1987



www.eelamview.com

# சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணி

1-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்கள் செல்லச் செல்ல அச் சிறிய கரந்தடி அணி 50 அல்லது 75 பேர்களைக் கொண்ட பெரியதொரு கரந்தடி படை அணியாக வளர்ந்தது.

அதை, தேவை ஏற்படும் வேளையில் சிறிய, சிறிய அணிகளாகப்பிரித்து பல்வேறு இடங்களிலும் வைத்து கரந்தடி முறையில் எதிரிக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினோம்.

இதனால் எதிரியின் விரைவான நகர்வுகள் வாகன ரோந்துகள் கட்டுப்படுத்தப் பட்டன.

எமது மண் மீது எதிரி வைத்திருந்த இராணுவ ஏகபோகம் உடைந்து சிதறியது.

இந்தக் கட்டத்தில் எதிரி நிலைமீதான தாக்குதல்களில், நாம் புதிய தந்திரங்களைக் கடைப்பிடித்ததுடன் புதிய ஆயுதங்களையும் பயன்படுத்தத் தொடங்கினோம்.

சில சந்தர்ப்பங்களில் தாக்கி அழிக்கப்பட்ட எதிரி நிலைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கப் போராடினோம்.

மற்றைய சந்தர்ப்பங்களில் அந்த நிலைகளிலேயே நாம் நீண்ட நேரம் தரித்து நின்று அவ் இடத்துக்கு வரும் மற்றைய இராணுவ அணிகளுடனும் ஒரு சிறிய சண்டையை நடாத்தி, பின்னர் பின்வாங்கித் தலைமறைவானோம். இத்தகைய சண்டை முறைகளின் வளர்ச்சிக்கட்டமாக எதிரியை அவனது முகாமுக்குள்ளேயே முடக்கி அல்லது ஒரு எல்லைவரை அவனைத் தடுத்து, பிரதேசங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயன்றோம் இதனால் நேரடிச் சண்டைகளில் ஈடுபட வேண்டிய தேவை அதிகரித்தது. எனவே எமது வீரர்களுக்கு நேரடிச்சண்டைகளுக்குரிய அதாவது மரபு வழி இராணுவத்துக்குரிய பயிற்சிகளையும், ஆயுதங்களையும், தந்திரோபாயங்களையும் வழங்கத் தொடங்கினோம்.



சாள்ஸ் அன்ரனி படையணியின் தளபதி திரு. பால்ராஜ்

இன்று முகாங்களையே அழித்து மண்ணை மீட்கத் தொடங்கியுள்ளோம். அதே சமயம் எதிரியும் எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அடிக்கடி பாரிய படை எடுப்புக்களை நடாத்துகின்றான்.

இதனால் நீண்டதும், கடுமையானதுமான மரபு வழிச் சண்டைகளில் நாம் ஈடுபட்டபடியுள்ளோம்.

இத்தகைய மரபு வழிச் சண்டைகளில் நாம் வெற்றி பெற வேண்டுமாயின் மரபு வழி இராணுவத்திற்கு உரித்தான பயிற்சி, தந்திரம், நவீன ஆயுதங்களைக் கையாளக் கூடிய திறமை, படை நகர்த்துதலுக்கு தேவையான புலமை கொண்ட சிறப்புப்படையணிகளின் அவசியம் எழுகின்றது.

எனவே போராட்ட வளர்ச்சியினால் எழுந்த வரலாற்றுத் தேவையை ஈடுசெய்யும் முதற் கட்டமாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இப்படை அணி மரபு வழி இராணுவத்துக்குரிய தன்மைகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்புப்படையணியை அங்குரார்ப்பணம் செய்து தோற்றுவித்த பின்னர் அணிவீரர்கள் மத்தியில் தலைவர் பிரபாகரன் உரையாற்றுகையில் பயிற்சி, தந்திரம், துணிவு, வெற்றி இவைதான் இப் படையணியின் தாரக மந்திரமாக இருக்கும் எனப் பிரகடனப் படுத்தினார்.

அதாவது நீண்டதும், கடினமானதுமான பெரும் போரில நின்று தாக்குப்பிடிப்பதற்கும், படையை நடாத்துவதற்கும் கடுமையான உள — உடல் பயிற்சிகள் அவசியம். அதே சமயம் எதிரியினது பலத்தையும், பலவீனத்தையும் தெரிந்துகொண்டு அதற்கேற்ற விதத்தில் அவனை வெற்றி கொள்வதற்குத் தேவையான தந்திரங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். பயிற்சியும், தந்திரமும் இருந்தால் மட்டும் போதாது. அதை நடைமுறைப் படுத்தும் துணிவும் தேவை. இந்த மூன்றும் ஒரு படை அணிக்கு அமையப் பெறுமானால் வெற்றி நிச்சயம்.

இதைத்தான் பயிற்சி, தந்திரம், துணிவு, வெற்றி என்ற தலைவர் பிரபாகரனது வார்த்தைகள் சுட்டிக் காட்டுகின்றன.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி இவற்றையே தனது தாரக மந்திரமாகக் கொண்டுள்ளது. இனி இந்தப் பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குரிய காரணங்களைப் பார்ப்போம்.

திரு. சாள்ஸ் அன்ரனி எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினரும் தலைசிறந்ததொரு வழிகாட்டியுமாவார். இவர் திருமலையைச் சேர்ந்தவர்.

1982ஆம் ஆண்டு முதன்முதலாக எமது இயக்கம் தாக்குதல் அணியொன்றை உருவாக்கியிருந்தது. அந்த அணியின் பொறுப்பாளனாக சாள்ஸ் அன்ரனி பொறுப்பேற்றிருந்தார். இவர் தலைமை தாங்கிய பல தாக்குதல்கள் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டிருந்தன.

எமது போராட்ட வரலாற்றில் முதன்முதலாக (1981ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் நாள்) யாழ். கஸ்தூரியார் வீதியில் வைத்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் அவர்களது ஒரு துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது.

இந்த வெற்றிகரமான அதிரடித்தாக்குதலை சாள்ஸ் அன்ரனியே தலைமைதாங்கி நடாத்தியிருந்தார்.

இவர் தன்னுடைய போராட்ட வாழ்வில் மூன்றுமுறை உயிராபத்தைச் சந்தித்துள்ளார். அந்த மூன்று தடவைகளிலும் தனது உயிரைக் கருத்திலெடுக்காது, இயக்கத்தின் ஆயுதங்களைக் காப்பாற்ற அவர் எடுத்த முயற்சிகளும், இரகசியம் பேணுவதன் மூலம் விடுதலை இயக்கத்தை வளர்த்தெடுக்க இறுதி நேரத்தில் அவர்காட்டிய அர்ப்பண உணர்வுகளும் எமது போராளிகளுக்கு வழிகாட்டிகளாக இருந்துகொண்டே வருகின்றன.

1982 ஆம் ஆண்டு தை மாதத்தில் ஒரு நாள் மறைவிடம் ஒன்றில் அவரது துப்பாக்கி தற்செயலாக வெடித்ததினால் நெஞ்சில் காயமடைகின்றார்.

அந்த வெடிஓசை கேட்டு சிங்களப் படையினர் அவ்விடத்திற்கு வந்தாலும்கூட தனது உயிர் போனாலும் தனது துப்பாக்கி பறிபோய் விடக்கூடாது என்ற காரணத்திற்காக முதலில் அந்தத் துப்பாக்கியை இடமாற்றம் செய்யும்படி சக தோழர்களை அவசரப்படுத்தினார்.

துப்பாக்கி பாதுகாப்பாக இடம் மாற்றப்பட்ட பின்னர் தான் அவர் மருத்துவ வசதியை ஏற்றுக்கொண்டார்.

இதே போன்று 1982 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27-ம் நாள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கு தலைமை ஏற்று வழிநடாத்திச்சென்றார். அந்தத் தாக்குதலில் சாள்ஸ் அன்ரனி காலில் காயமடைந்தார். அப்போதும்கூட எதிரியின் ஆயுதங்களை சேகரிப்பதிலும், அவற்றைப் பத்திரமாகக் கொண்டுசென்று பாதுகாப்பதிலும்தான் அவர் அக்கறை செலுத்தினாரே அல்லாது தனது காயங்களைப் பற்றி அவர் பொருட்படுத்தவில்லை.

இதே போன்று மூன்றாவது தடவை அவர் சந்தித்த உயிராபத்து அவருக்கு இறுதியானதாகவே போய்விட்டது.

1983ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் நாள் துரோகி ஒருவனின் காட்டிக் கொடுப்பால் மீசாலையில் சாள்ஸ் அன்ரனி குழுவினர் தங்கியிருந்த வீடு இராணுவத்தின் தாக்குதலுக்குள்ளானது.

எதிர்த்தாக்குதல் நடாத்திய வண்ணம் எதிரியின் முற்றுகையை முறியடித்து தப்ப முயற்சிக்கும் போது சாள்ஸ் அன்ரனிக்கு காலிலும் நெஞ்சிலும் காயமேற்படுகின்றது. தோழர்கள் இருவரும் அவனைக் காப்பாற்ற முயற்சிக்கின்றனர் சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்ட சாள்ஸ் அன்ரனி, தன்னைக் காப்பாற்ற முயலும் தோழர்களிற்கு ஏற்படப்போகும் ஆபத்தினை உணர்ந்து கொள்கின்றான். தன்னைச் சுட்டுக் கொன்றுவிட்டு தனது ஆயுதத்தையும் எடுத்துக்கொண்டு தப்பிச் செல்லுமாறு தோழர்களைப் பணிக்கிறான். தோழர்கள் ஒருகணம் தடுமாறுகிறார்கள். மிகவும் கண்டிப்பான குரலில் மீண்டும் ஒருமுறை கட்டளையிடுகிறான் சாள்ஸ் அன்ரனி. சாள்ஸ் அன்ரனி தனது உயிரிலும் மேலாக மதித்த அவனது துப்பாக்கியினாலேயே அவனைச் சுட்டு விட்டு அத் துப்பாக்கியுடனும் இன்னுமோர் துப்பாக்கியுடனும் இரு தோழர்களும் விரைவாக பின்வாங்குகின்றனர்.

(அடுத்து ஆனந்தும் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகின்றான். எவ்வித தயக்கமும் இன்றி ஆனந்தும் தனது தோழனிற்குக் கூறுகின்றான் தன்னைச் சுட்டுவிட்டு தனது துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு தப்பிச்சென்றுவிடும்படி - தன்னைச் சுதாகரித்துக் கொண்ட தோழன் ஆனந்தையும் சுட்ட பின்பு ஆனந்தின் துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு தப்பி ஓடுகிறான். அப்போது அவனது கையிலும் துப்பாக்கிச் சூடு படுகின்றது.)

இந்த இராணுவத் தலைவனான சாள்ஸ் அன்ரனியின் செயற்பாடு இன்றும் எமது போராளிகளுக்கு ஒரு படிப்பினையாகவும், வழிகாட்டியாகவும் இருந்து வருகின்றது.

இத்தகைய மாவீரனும், முன்னோடியுமான சாள்ஸ் அன்ரனியின் பெயரை இந்தப் படையணிக்குச் சூட்டியுள்ளோம்.

இதன் மூலம் இப் படையணிக்கு ஒரு பெருமையும், வேகமும் உண்டாகின்றது.

இதுவரை நாளும் எமது இராணுவச் செயற்பாடுகள் பிராந்திய ரீதியிலேயே அமைந்திருந்தன. (யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், திருக்கோணமலை, மட்டு - அம்பாறை, மணலாறு)

பிராந்தியங்கள் தனித்தனியாகவோ அல்லது இணைந்தோ எதிரியுடன் போரிட்டு வருகின்றன. ஆனால் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி ஒரு பிராந்தியத்திற்கு உட்பட்டதல்ல.

இது தமிழீழம் முழுவதிற்குமான ஒரு அணியாகும் இதில் எல்லாப் பிராந்தியங்களையும் சேர்ந்த போராளிகள் அங்கம் வகிக்கின்றார்கள்.

இது தமிழீழத்தின் எந்தப் பகுதிக்கும் சென்றுபோரிடும்.

இச் சிறப்புப்படையணி உருவாக்கப்பட்டதிலிருந்து இச் செய்தி எழுதப்படும்வரை இரண்டு பெரிய நேரடிச் சண்டைகளில் ஈடுபட்டு, இது வெற்றி கண்டுள்ளது.

இந்த இரண்டு போரிலும் 51 படையணி வீரர்கள் வீரமரணமடைந்துள்ளனர்.

கடந்த மே மாதம் வவுனியா பகுதியிலிருந்து பாரிய படையெடுப்பொன்றை நடாத்தி ஓமந்தை, கொந்தக்காரன் குளம், கோழியாகுளம் ஆகிய பகுதிகளில் நிலை கொண்டிருந்த சிங்களப் படைகள்மீது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி நடாத்திய தாக்குதலில் 50ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் அந்த நிலைகளிலிருந்து இராணுவம் விரட்டியும் அடிக்கப்பட்டது.



சாள்ஸ் அன்ரனி (லெப். சீலன்)

மீண்டும் யூன் மாத நடுப்பகுதியில் வவுனியாவிலிருந்து மன்னார் மாவட்டத்திலுள்ள மடுப்பகுதியை நோக்கி ஒரு படை எடுப்பொன்றை சிங்களப் படைகள் நடாத்தின.

பூவரசங்குளம், பிராமணாலங்குளம் பகுதிகளில் வைத்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி சிங்களப் படையணிகளைச் சந்தித்துப் பொருதியது.

சிங்களப் படைகள் முன்னெப்போதும் கண்டிராத கடுமையான நேரடிச் சண்டையைச் சந்தித்தன.

14 - 06 - 1991 இலிருந்து 21 - 06 - 1991 வரை சுமார் ஒருவார காலம் நடந்த இந்தக் கடும் சண்டையில் 100ற்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்.

பிராமணாலங் குளத்தில் வைத்து ஒரு இராணுவ உலங்குவானூர்தியும் சுட்டு வீழ்த்தப் பட்டது. அத்துடன் சிங்களப் படையணிகளும் பின்நோக்கி விரட்டப்பட்டன.

அதேசமயம் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆனையிறவுப் போரிலும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி முதன்மையான பங்கை வகித்துக்கொண்டிருக்கின்றது.

இவ்விதமாக இப்படையணியின் பதப்பிலும் அது சூட்டிக் கொண்ட பெயரிலும், பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் பொதிந்து கிடக்கின்றது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதியாக திரு. பால்ராஜ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் வன்னிப் பிராந்தியத்தின் தளபதியாக இருந்து வெற்றிகரமாக நடந்து முடிந்த கொக்காவில், மாங்குளம் தாக்குதல்களுக்குத் தலைமை வகித்திருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச் சிறப்புப் படையணி தமிழீழ போராட்ட வரலாற்றில் பல வீர சாதனைகளைப் படைக்கும் என்பது திண்ணம்.

www.eelamview.com

# இரண்டு தசாப்தங்களும் - புலிகளும்

## 2

இரண்டு தசாப்தங்களும் புலிகளும் என்ற தலைப்பில் முத்தமிழ் விழா மலரில் (1991) திரு. அன்ரன் பாலசிங்கம் எழுதிய கட்டுரையின் தொடர்ச்சியை இங்கு மறு பிரசுரம் செய்கிறோம்.

1978 ஏப்ரல் 7ந் திகதி இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையும் அவரது பொலீஸ் கோஷ்டியும் முருங்கன் காட்டுக்குள் புலிகளால் அழிக்கப்பட்ட சம்பவம் சிங்கள ஆட்சியாளருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியை அழித்தமைக்கும், மற்றைய பொலீஸ் அதிகாரிகள், இனத்துரோகிகள் கொல்லப்பட்டமைக்கும் உரிமைகோரி, முதற்றடவையாக விடுதலைப்புலிகள் வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிக்கையை கொழும்புப் பத்திரிகைகள் முக்கியம் கொடுத்து பிரசுரித்தன. இதனூடாகப் புலிகள் இயக்கம தமிழ், சிங்கள மக்கள மத்தியில் பிரபல்யம் பெற்றது. விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் வளர்ச்சிபெற்று வருவதைக் கண்டு சிங்கள அரசு திகைத்தது. தமிழீழத்தில் தலைமறைவாக வளர்ந்து வரும் விடுதலை இயக்கத்தை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்ற நோக்கில் 1978 மே மாதம் விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்தை சிங்கள அரசு பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. இந்தச்சட்டம் ஆயுதப்படைகளுக்கு அளவுக்குமீறிய அதிகாரங்களை வழங்கியது. இளைஞர்களை கண்மூடித்தனமாகக் கைதுசெய்யவும், விசாரணை இல்லாமல் நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைத்திருக்கவும், சித்திரவதைசெய்து கொல்லவும் இந்தக் கொடும் சட்டம் இடமளித்தது. ஒட்டுமொத்தத்தில், தமிழருக்கு எதிரான அடக்குமுறையை இந்தச்சட்டம் மேலும் வலுப்படுத்தியது.

1978ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ந்திகதி ஜெயவர்த்தனா அரசு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை அமுல்படுத்தியது. இந்த அரசியலமைப்புச் சட்டம் சர்வ அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை நிறுவியது. சிங்கள மொழிக்கும், பௌத்தத்திற்கும் விசேட அந்தஸ்தை வழங்கியது. தமிழ்மொழியை இரண்டாம்தர நிலைக்குத் தள்ளியது. சாராம்சத்தில்; சிங்கள பௌத்த பேரினவாதம் சட்டமூலம் வலுப்பெற்றதோடு ஒரு பாசிச சர்வாதிகார ஆட்சியும் அமையப் பெற்றது. சிறீலங்கா ஆட்சி அமைப்பிலிருந்து தமிழ்மக்கள் பூரணமாக அந்நியப் படுத்தப்பட்டனர்.

### அவ்ரோவிமானம் புலிகளால் தகர்ப்பு

பாராளுமன்ற ஆசனங்களைத் தொடர்ந்தும் இறுகப்பற்றியிருந்த கூட்டணியினர் இந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ஆயினும் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட இந்த அநீதியை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர உறுதி பூண்டது. இந்தச் சட்டம் சிறீலங்கா தேசியப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அதே தினத்தில் அரசுக்குச் சொந்தமான பயணிகள் விமானமான 'அவ்ரோ' விமானத்தை விடுதலைப்புலிகள் தகர்த்தனர். இரத்மலானை விமானநிலையத்தில் பயணிகள் இறங்கிய சிறிது நேரத்தில் புலிகளால் வைக்கப்பட்ட நேரக்குண்டு வெடித்து விமானம் சிதறியது. கொழும்பில் நிகழ்ந்த முதற் குண்டுவெடிப்பான இந்தச் சம்பவம் தமிழர் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தியதுடன், இனத்துவேசத் திமிர்கொண்ட சிங்கள அரசின் முகத்தில் கரி பூசுவதாகவும் அமைந்தது.

எழுபதுகளைக் கொண்ட தசாப்தத்தின் இறுதிக் காலகட்டம் இன ஒடுக்குதலின் இரத்தம்படிந்த இருண்ட அத்தியாயத்துடன் முடிவுற்றது. தீவிரமடைந்து வந்த விடுதலைப்புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை ஒழித்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் ஜெயவர்த்தனா அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்தது. இதன்படி 1979 யூலை 30ந் திகதி விடுதலைப்புலிகள் தடைச்சட்டத்திற்குப் பதிலாக படுமோசமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தது. சனநாயக தர்மங்களுக்கு விரோதமானதும், அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுமான இந்தக் கொடுமையான சட்டத்தை சர்வதேச சமூகம் கடுமையாகக் கண்டித்தது. இந்தப் பயங்கரவாதச் சட்டத்தைப் பிறப்பித்த நேரத்தில் யாழ்ப்பாணக்குடாநாட்டில் அவசரகாலச்சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டது.

பிரிகேடியர் வீரதுங்கா தலைமையில் மேலதிக இராணுவப் படைகளை யாழ்ப்பாணத்தில் குவித்த ஜெயவர்த்தனா ஆறுமாத காலத்திற்குள் அதாவது 1979 டிசம்பர் 31ந் திகதிக்குள், விடுதலைப்புலிகள் இயக்கமும் அதன் "பயங்கரவாத" நடவடிக்கைகளும் முற்றாக அழிக்கப்பட வேண்டுமென பிரிகேடியர் வீரதுங்காவுக்கு விசேட ஆணை பிறப்பித்தார்.

### யாழ். குடாவில் இராணுவப் பயங்கரவாதம்

வீரதுங்காவின் இராணுவம் யாழ்ப்பாணத்தில் வெறியாட்டம் ஆடியது. முன்னென்றுமில்லாத வகையில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. நூற்றுக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்து காவலில் தனமாக சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். பலர் இராணுவ முகாம்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் வதைபட்டு படுகொலை செய்யப்பட்டார்கள், அவர்களது சிதைந்த உடல்கள் வீதியோரம் வீசப்பட்டன. யாழ். குடாநாட்டு மக்கள் மீது இராணுவ பயங்கரவாதம் கோரதாண்டவம் புரிந்தது.

வீரதுங்காவின் ஆறுமாத காலக் கொடுங்கோன்மை ஆட்சியின் விளைவாகப் பெரும் தொகையில் தமிழ் இளைஞர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பின்னால் அணிதிரண்டனர். பரந்துபட்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு மனமுவந்து ஆதரவு நல்கினர்.

### உயர் வடிவம் பெற்ற ஆயுதப் போராட்டம்

எழுபதுகளின் தசாப்தம் சிங்கள தமிழ் தேசிய முரண்பாட்டை என்றுமில்லாதவாறு முதிர்ச்சியடையச் செய்தது. அரச ஒடுக்குமுறையின் தீவிரமான அழுத்தம் தமிழீழத்தில் அரசியல் வன்முறையை அலைமோதச் செய்தது. இந்த அரசியல் வன்முறையால் எழுந்த புறநிலைகள் ஒரு பலம் வாய்ந்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை, புலிகள் இயக்கத்தை பிறப்பெடுக்கச் செய்தது. அரச ஒடுக்குமுறை மேலும் மேலும் தீவிரமடைந்து செல்ல ஆயுத எதிர்ப்பு முறையும் தீவிரமடைந்து சென்றது. பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம் வளர்ந்து விரிவடைய மிதவாதப் பாராளுமன்ற அரசியல் செயலிழந்து போனது. ஒட்டு மொத்தத்தில், இந்த தசாப்தம் தமிழரின் அரசியல் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக உயிர்வடிவம் பெறச் செய்ததுடன், தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி தமிழீழத் தனியரசை நிறுவும் வரலாற்றுத் தேவையையும் வெளிப்படுத்தியது.

### எண்பதுகளின் தசாப்தம்

வரலாறு காணாத வன்முறைப் பூகம்பங்கள் இலங்கைத் தீவை உலுப்பிய காலகட்டமாக எண்பதுகளின் தசாப்தம் அமைந்தது. இந்தக் காலகட்டத்தில், மூர்க்கம் கொண்டு எழுந்த அரச ஒடுக்குமுறைக்கு, எதிராகச் சீற்றம் கொண்டு எழுந்த புலிகளின் எதிர்ப்பியக்கம் சூறாவளி வேகத்தில் உக்கிரமடைந்தது.

இந்த தசாப்தத்தில் தமிழீழம் என்றுமில்லாதவாறு இரத்தம் சிந்தியது. சிங்கள படையெடுப்புக்களும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்பும், உள்ளூர்க் கூலிப்படைகளின் அராஜகமுமாக தமிழீழ மண் ரணகளமாகியது.

மிகக் கொந்தளிப்பான இந்தக் காலகட்டத்தில் புயலின் மையமாக நின்று, எல்லா எதிர்ப்பியக்கத்திற்கும் ஈடுகொடுத்து, தமிழரின் வீர விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் பிரபாகரன். ஆகவே தான், இந்தத் தசாப்தத்தின் மாமனிதனாக, வரலாற்றுக் கதாநாயகனாக பிரபாகரன் கருதப்படவேண்டியவர்.

இராணுவ, அரசியல், ராஜதந்திர பரிமாணங்களில் பல திருப்புமுனைகளை எடுத்த இந்தப் பத்தாண்டு வரலாற்றில் புலிகள் இயக்கம் பல சிக்கலான சவால்களுக்கு முகங்கொடுத்தது. இதில் இந்தியத் தலையீடு முக்கியம் பெறுகிறது. 1983 நடுப்பகுதியில் ராஜதந்திரக் குறுக்கீடாக ஆரம்பித்து 1987 அக்டோபரில் நேரடி இராணுவ ஆக்கிரமிப்பாக பூதாகாரமெடுத்து 1990 மார்ச் வரை நீடித்த இந்திய வல்லாதிக்கத் தலையீட்டைத் தனித்து நின்று எதிர்த்து ஈற்றில் வெற்றிகொண்டமை புலிகள் இயக்கத்தின் மகத்தான வரலாற்றுச் சாதனையாகும்.

ஒரு மாபெரும் விடுதலைச் சக்தியாக வளர்ந்து, இக்காலகட்டத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளையும் திருப்புமுனைகளையும் புலிகள் இயக்கமே நிர்ணயித்தது. இதனை இக்கட்டுரையில் முழுமையாக மீளாய்வு செய்வது கடினம். எனினும் சுருக்கமாகப் பார்ப்போம்.

### யாழ். நகரம் தீ வைப்பு

எண்பதுகளின் ஆரம்பம். கூட்டணியின் இனத்துரோகப் படலமாகவும், சிங்களப் பேரினவாதத்தின் இன ஒழிப்பு வன்முறையாகவும் தொடங்கியது. தமிழீழத் தனியரசு அமைப்பதற்குத் தமிழ் மக்களிடம் ஒப்புதல் பெற்று கொழும்புப் பாராளு



எண்பதுகளில் தலைவர் பிரபாகரன்

www.eelamview.com

மன்றத்திற்குள் நுழைந்து கொண்ட கூட்டணி, மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்கும் அளவிற்குக் கீழிறங்கியது. இந்த மாவட்டசபைத் தேர்தலுக்கு முதல்நாள் இரவு, 1981மே 31ந் திகதி, யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆயுதப்படைகள் வெறியாட்டம் ஆடி யாழ். நகரை தீயிட்டுக் கொழுத்தியது. யாழ். நூல்நிலையமும் அதிலிருந்த வரலாற்றுக் கலாச்சாரப் பொக்கிஷங்களும் தீ வைத்து அழிக்கப்பட்டன. ஜெயவர்த்தனாவின் மூத்த அமைச்சர்களான சிறில்மத்தியூவும், காமினி திசநாயக்காவும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இந்த நாசவேலையைச் செய்து முடித்தனர். யாழ்ப்பாணத் தீவைப்பை அடுத்து, சரியாக மூன்று மாதங்களின் பின்னர் இலங்கைத்தீவு பூராவும் தமிழருக்கெதிரான இனக்கலவரம் வெடித்தது. நூற்றுக்கணக்கில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கோடிக்கணக்கில் தமிழர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

## புலிகளின் தாக்குதல்கள்

அரச வன்முறை தீவிரமாக விடுதலைப் புலிகளின் ஆயுத எதிர்ப்பியக்கமும் அதி தீவிரமடைந்தது.

1981 அக்டோபர் 15ந் திகதி, சாள்ஸ் அன்ரனி (சீலன்) தலைமையில் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணி ஒன்று யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் இராணுவ ஜீப் வண்டி ஒன்றைத் தாக்கி இரு இராணுவத்தினரை அழித்தனர். சிங்கள இராணுவத்திற்கு எதிராக விடுதலைப்புலிகள் நடாத்திய முதலாவது கெரில்லாத் தாக்குதல் இதுவாகும்.

1982 யூலை 2ந் திகதி நெல்லியடியில் ரோந்து சென்ற பொலிஸ் ஜீப்வண்டி மீது திடீர்த் தாக்குதலை நடாத்திய புலிகள் நான்கு பொலிசாரைக் கொன்றனர்.

1982 அக்டோபர் 27ந் திகதி விடுதலைப்புலிகளின் கெரில்லா அணி ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீது வெற்றிகரமான தாக்குதலை நடாத்தியது. இந்தத் தாக்குதலில் மூன்று பொலிசார் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமடைந்தனர். பொலிஸ் நிலைய ஆயுதக் களஞ்சியத்திலிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்விதம் எண்பதின் ஆரம்பத்தில் முனைப்புற்ற புலிகளின் ஆயுத எதிர்ப்பியக்கம் 1983ல் மேலும் தீவிரமடைந்தது.

## மகத்தான அரசியல் வெற்றி

இது இவ்வாறிருக்க, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டமாக, அதிகாரப் பரவலாக்கத்தின் அத்திவாரமாக கூட்டணியால் சிங்கள அரசிடமிருந்து பெறப்பட்ட மாவட்டசபை அதிகார வறுமையால் செயலிழந்து செத்துப்போனது. இந்த நிலையில், 1983 மே 18ஆம் திகதி வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதென அரசு அறிவித்ததும் தேர்தல் களத்தில் குதிக்க கூட்டணியும் மற்றும் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளும் முன்வந்தன. வடக்கில் தாண்டவமாடும் அரச பயங்கரவாதத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு விடுதலைப்புலிகள் பொது மக்களைக் கேட்டுக்கொண்டனர். வடக்கில் அரசின் கைப்பொம்மைகளாகச் செயற்பட்டுவந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும், ஆதரவாளர்களும் விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையை மீறித் தேர்தலில் குதிக்க முற்பட்டதால் இவர்களில் மூவரை விடுதலைப்புலிகள் சுட்டுக் கொன்றனர். ஒரே நாளில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து ஐ. தே கட்சியின் சார்பில் நின்ற சகல தமிழ் வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றதுடன் பல தமிழர்கள் ஐ. தே கட்சியிலிருந்தும் ராஜினாமா செய்தனர். புலிகளின் தீவிர அரசியல் பிரச்சாரத்திற்குச் செவிசாய்த்த வடமாகாண மக்கள் உள்ளூராட்சித் தேர்தலை பூரணமாய்ப் பகிஷ்கரித்தனர். இந்த பகிஷ்கரிப்பு அரசியல் ரீதியில் புலிகளுக்குக்கிட்டியமகத்தான வெற்றியாக அமைந்தது. புலிகளின் வேண்டுகோளை நிராகரித்து தேர்தலில் நின்ற கூட்டணியினர் சகிக்கமுடியாத அவமானத்தை தேடிக் கொண்டனர் தேர்தலில் சந்தித்த தோல்வியுடன் கூட்டணி செல்லாக்காசாக மாறியது. இத்துடன் தமிழீழ அரசியல் அரங்கிலிருந்து கூட்டணியின் உதய சூரியன் நிரந்தரமாக அஸ்தமித்தது.

## 1983 யூலை நிகழ்வுகள்

தமிழர் வரலாற்றில் கொந்தளிப்பு மிகுந்த காலகட்டமாக 1983 யூலை மாதம் அமைந்தது. ஒரு சம்பவம், சங்கிலித் தொடர்பாக பல நிகழ்வுகளை விளைவித்துப் பாரிய அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தி, போராட்ட வரலாற்றின் ஓட்டத்தை முனைப்படுத்தும் வகையில் அமைந்ததென்றால், அது யூலை 23ந் திகதி திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல் சம்பவமாகும். சிங்களப் பேரினவாதத்தைப் பேரதிர்ச்சியில் ஆழ்த்திய இந்தத் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்த அதிரடித் தாக்குதலைத் திட்டமிட்டு அதில் பங்குகொண்ட பிரபாகரன் தனது கையால் ஏழு இராணுவத்தினரைச் சுட்டுக் கொன்றார். தமிழீழத்தில் கூடிய தொகையில் சிங்களப் படையினர் கொல்லப்பட்ட முதற் சம்பவம் இதுவாகும்.

"பயங்கரவாதத்தைப்" பூண்டோடு அழிக்கப்போவதாக மாறி, மாறி முழங்கிக் கொண்டிருந்த ஜெயவர்த்தனா அரசுக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் முகத்தில் ஓங்கி அறைந்தது போல் இருந்தது. புலிகள் இயக்கத்தின் தலைமையில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒரு திண்ணியமானவடிவத்தையும் காத்திரமான வளர்ச்சியையும் பெற்று வருகிறது என்பதை தமிழ் மக்களுக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் உணர்த்தியது.

இந்த சம்பவத்தின் அதிர்ச்சி அலைகள் தென்னிலங்கையில் பரவியபோது அதனைத் தமிழருக்கு எதிரான இனக்கிளர்ச்சியாக மாற்றிவிட்டு, கொழும்பில் நிலைகொண்டிருந்த தமிழரின் பொருளாதார ஆதிக்கத்தை நாசமாக்கிவிட சிங்கள அரசு திட்டமிட்டது. அரசின் தூண்டுதலின் பேரில் யூலை 26ஆந் திகதியிலிருந்து தென்னிலங்கையில் வெடித்துப் பரவிய இனப்பூகம்பம் வரலாறு காணாத இரத்தக்களரியை உண்டுபண்ணியது. சிங்களக் காடையரின் காட்டுமிராண்டித்தனமான வன்முறை முழு உலகத்தையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.



ஆரம்ப நாட்களில் தலைவர் பிரபாகரனோடு தோளோடு - தோள் நின்று போராடிய எமது மூத்த உறுப்பினர் செல்லக்கிளி அம்மான்

இவர் 23.07.1983 இல் திருநெல்வேலியில் நடந்த இராணுவ வாகனத் தொடர் மீதான தாக்குதலில் வீரமரணமடைந்தார்.

## ஆறாவது சட்டத் திருத்தம்

இந்த இனத்துவேச வன்முறையானது தமிழ், சிங்கள தேசங்களை என்றுமில்லாதபடி பிளவுபடுத்தியது. தமிழ்த் தாயகத்தின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டும் தனியரசுப்போராட்டத்திற்கு என்றுமில்லாத உத்வேகம் பிறந்தது. இனவுணர்ச்சிப் பிரவாகத்தில் உந்தப்பட்டு ஆயிரமாயிரம் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதிக்கத் தயாரானார்கள். தனியரசுப் போராட்டம் மேலோங்குவதைக் கண்டு பயந்த சிங்கள அரசு, அவசர அவசரமாக, அரசியலமைப்பில் ஆறாவது திருத்தம் ஒன்றை அமுல்படுத்தி, தமிழரின் தன்னாட்சி உரிமைக்குத் தடை விதித்தது. இந்தத் தடை தனியரசுப் போராட்டத்திற்கு மேலும் உரமேற்றுவதாக அமைந்தது. இந்தச் சமயத்தில், பாராளுமன்றத்திலும் இருக்கமுடியாது தமிழீழத்திற்கும் திரும்பமுடியாது தத்தளித்த கூட்டணித் தலைவர்கள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தார்கள்.

## இந்தியத் தலையீடு

இதுவரை காலமும் இலங்கைத்தீவை அதிரவைத்த சம்பவங்களையும், அதன் வரலாற்றுப் போக்கினையும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்த இந்திய அரசு யூலைக் கலவரத்துடன் இலங்கையில் தலையிட முடிவு செய்தது. இந்திய வல்லாதிக்கத்தை வெறுத்த ஜெயவர்த்தனாவின் அமெரிக்க ஏகாதிபத்திய சார்புப் போக்கும், இலங்கையில் இந்திய பகைமைச் சக்திகளின் ஊடுருவலும் பாரத அரசுக்குச் சினத்தை மூட்டியது. அதே சமயம், ஈழத்தமிழர்கள் மத்தியில் மேலோங்கி வரும் தனியரசுப் போராட்டமும் அதனை முன்னெடுத்த புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கமும் இந்திய உபகண்டத்தில் பிரிவினைவாத சக்திகளுக்கு ஊக்கமளிக்கலாம் எனவும் இந்தியா அஞ்சியது எனவே, இந்த அச்சுறுத்தல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, இலங்கைத்தீவை தனது பூகோள-கேந்திர ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர இந்திய அரசு தீர்மானித்தது. இந்த நோக்கை நிறைவேற்ற இரகசியத் திட்டம் ஒன்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சினால் தீட்டப்பட்டது.

இந்த இரகசியத் திட்டத்தின்படி, தமிழ்ப் போராளி அமைப்புகளுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் அளித்து, ஆயுத எதிர்ப்பியக்கத்தைத் தீவிரமாக்கி, ஜெயவர்த்தனா அரசுக்கு நெருக்குதலை உண்டுபண்ணி ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவர இந்தியா விரும்பியது ஜெயவர்த்தனாவின் திமிரை அடக்கி அவரை வழிக்குக் கொண்டுவருவது மட்டுமல்லாமல் தமிழீழ மக்களின் தனியரசுப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்தியா திட்டமிட்டது. ஏனைய அமைப்புக்களுக்கு கூடிய அளவு ஆயுதங்களும், பயிற்சியும், பண உதவியும் அளித்து விட்டால் இராணுவ சமபலத்தை மாற்றியமைத்து தனிநாட்டு இலட்சியத்தில் உறுதியுடன் நிற்கும் புலிகள் இயக்கத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரலாம் அல்லது ஒழித்து விடலாம் எனவும் இந்திய அரசு கருதியது.


இந்தத் திட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரத்தை இந்திரா காந்தி அம்மையார் இந்திய உளவுப்படையான றோவுக்கு (Raw) வழங்கினார்.

## செயற்கையானவீக்கம்

1983 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பாரிய தாக்கங்களை விளைவித்தன. வரலாற்றுப் படிமுறை வளர்ச்சியில் உருவகம் கொண்டு வந்த தமிழரின் ஆயுத எதிர்ப்பு இயக்கம் இந்திய தலையீட்டினால் திடீரென ஒரு செயற்கையான வீக்கம் அடைந்தது. செய்வதறியாது செயலிழந்து போயிருந்த பல தமிழ்க் குழுக்கள் இந்தியாவின் இரத்த மூட்டலினால் உயிர்பெற்று எழுந்து நிமிர்ந்தன. படைப்பலத்தை பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற அவாவில் கண்மூடித்தனமான ஆட்சேர்ப்புகள் நடந்தன. இதனால் பல சமூக விரோத சக்திகள் இந்தக் குழுக்களுக்குள் ஊடுருவல் செய்யமுடிந்தது. இதன் விளைவாக ஒழுக்கம், கட்டுப்பாடு சீர்குலைந்தது.

சிறு அளவில் இந்திய உதவியைப் புலிகள் பெற்றுக் கொண்டாலும் இந்திய அழுத்தங்களுக்கு வளைந்து கொடாமல் தனித்துவமான போக்கிலும் இலட்சிய உறுதியிலும் இறுக்கமாக இருந்தனர். ஆனால் அநேகமாக மற்றைய அமைப்புகள் எல்லாமே, இந்திய உதவியில் மெய்மறந்து இந்திய எசமானுக்கு அடிமைப்பட்டன. இந்தியாவின் கூலிப்படை என்று டெலோ இயக்கம் தன்னை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியது.

(அடுத்த இதழில் முடிவுறும்)



07. 09. 1978 இல் புலிகளால் தகர்க்கப் பட்ட அவ்ரோ விமானம்.

www.eelamview.com



# சின்ன வீரனே!

துப்பாக்கியோடு திரிகின்ற சிறுவனே!
பக்கத்தில் வா!
உனக்கு வயது பதினான்கா? பதினைந்தா?
எத்தனையாக இருந்தாலும்
மகனே! அருகில் வா-
உன் பாதத்தைக் காட்டு
தூசி படிந்த கால்களை
சேவிக்க விரும்புகின்றேன்

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''
காலையில் சத்தியப்பிரமாணம் செய்யும் போது
இந்த மந்திரச் சொல்லை
விசுவாசிப்பதாகக் கூறுகின்றாயே!
இந்த வேத மந்திரம்
உன்னை மலைபோல் நிமிர்த்துகின்றது.

உனக்குத்துப்பாக்கி தூக்கும் வயதல்ல—
வாய்ப்பாடு பாடமாக்கும் வயது.
என்றாலும் நீ நடக்கும்போது—
அட்டதிக்கும் அதிர்கின்றதே!
நீ மூச்சு விடும் போது . . .
புயலொன்று புறப்படுகின்றதே!
உன்னைப் பார்க்கும்போது
எனக்குப் பெருமையாக இருக்கிறது
பொறாமையாகவும் இருக்கிறதே!

உன் வயதில் நானென்ன சாதித்தேன்
ஒன்றுமில்லை . . . ஒன்றுமேயில்லை.

கிட்டி அடித்தேன்
கிழித்தட்டு மறித்தேன்
வெள்ளையப்பா வீட்டு விளாத்திக்குக் கல்லெறிந்தேன்

கையில் துவக்கேந்திக் களத்தில் நிற்கின்றாய்
கொட்டும் மழையினிலும் குறிபார்த்து நிற்கின்றாய்
தூங்காத விழியோடு 'சென்றி'க்கு நிற்கின்றாய்.

உன் பாதத்தைக் காட்டு
கால்களை முத்தமிடக் கவிஞன் விரும்புகிறேன்.

நீயும் உன் போன்ற புலிகளும்
களத்தில் உலாவரும் காலம்வரை
உலகத்துப் படையெல்லாம் ஒன்றாய் எதிர்க்கிலும்
வேங்கைகள் பாய்ந்து . . . வெற்றி கொள்ளும்.

❁ 1990 தை மாதத்தில் உணர்வு பத்திரிகையில் வெளிவந்த கவிதை ஆகும்.

# தமிழீழ வள ஆய்வு மாநாடு

யாழ். பல்கலைக் கழகத்தையும், கிளிநொச்சியில் உள்ள யாழ். பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தையும் சேர்ந்த பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் 22 தலைப்பின் கீழ் தமிழீழத்தின் வளம் குறித்த ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வாசித்தனர்.

இவ் ஆய்வுக் கட்டுரைகள் குறித்த கலந்துரையாடல்கள் மே மாதம் 22,25,26,27,28ஆம் திகதிகளிலும் யூன் 1-ம் திகதியும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

ஒவ்வொரு கட்டுரையாளரும் 3000 சொற்களுக்குள் தமது ஆய்வுக் கட்டுரைகளைத் தருவது என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டமைக்கு அமையவே இக்கட்டுரைகள் இருந்தன.

தமிழீழ வளங்கள் பற்றிச் சிதறிக் கிடக்கும் தரவுகளனைத்தையும் ஒன்று திரட்டி வெளிக்கொண்டு வந்து ஒரு நூலாக வெளியிடுவது என்ற நோக்கில்தான் இவ் ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டன.

பௌதிகப்பின்னணி - விவசாயமும் நீர்ப்பாசனமும் - மண்வளம் - குடியேற்றம் - தமிழீழ வரலாறு - சமூகப்பின்னணி - விவசாய அபிவிருத்தியில் ஒரு கண்ணோட்டம் - விவசாயமும் பயிர்ச்செய்கையும் - தமிழீழ மிருகவள அபிவிருத்தி- தமிழீழ மீன்வளம்- மூலிகைவளம்- தமிழீழக் குடித்தொகைப் பண்புகள்- மனிதவளமும் பயன்பாடும்- கல்விவளம்- போசாக்கும் மருத்துவமும்- கைத்தொழில் அபிவிருத்தி- தமிழீழ போக்குவரத்து- சுற்றுலாத்துறை- சூழல்பாதுகாப்பு- பண்பாடும் கலையும்- எழுத்து இலக்கியம்- சமயப் பின்னணி ஆகிய தலைப்புகளின் கீழ் ஆய்வுக்கட்டுரைகள் எழுதி வாசிக்கப்பட்டன.

இவை தமிழீழ வளம் குறித்த பல தகவல்களைக் கொண்டிருந்த போதும் ஒரு சில தகவல்கள் உதாரணத்தோடு இங்கே தரப்பட்டுள்ளன.

வட தமிழீழத்தின் நெல் உற்பத்தி ஆண்டொன்றிற்கு 156516 மெற்றிக் தொன். ஆனால் எமக்கு ஆண்டொன்றிற்கு 121688 மெற்றிக் தொன் போதுமானதாகும். தென் தமிழீழத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது எமது தேவைக்கு மேலதிகமாகவே நாம் அரிசி உற்பத்தி செய்கின்றோம்.

மீன்வளத்தைப் பொறுத்தவரை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தாமல் 1979ல் உச்ச உற்பத்தி 80499 தொன் பிடிக்கப்பட்டது. ஒரு மனிதனுக்கு ஆண்டொன்றுக்கு 18 கி. கி. மீன் வீதம் 20 இலட்சம் மக்களுக்கு ஆண்டொன்றுக்கு தேவையிலும் மேலாக 47,650 தொன் மீன் பிடிக்கப்பட்டது.

இலங்கைத் தீவின் 11000 மைல் கடற்பரப்பில் $\frac{2}{3}$ பகுதி தமிழீழத்தில் உண்டு.

கடலிலே இருக்கும் மேலதிக வளங்களை இப்போது கணிப்பிடமுடியாது. ஆனால் அது தமிழீழத்தின் மிகப்பெரிய வளமாகும்.

தமிழீழ கால் நடைகளைப் பொறுத்தவரை எமது பால் தேவையை அது பூர்த்தி செய்யவில்லை. ஆனால் பூர்த்தி செய்யக்கூடிய வளம் உண்டு. சிறிலங்கா எவ்வித உதவியும் செய்யாத போதும் இலங்கைத் தீவில், தமிழீழத்தில் 6,27,100 மாடுகளும், 2,30,800 ஆடுகளும் இருக்கின்றன.

இலங்கைத் தீவை ஒப்பிடும் போது தமிழீழத்தில் 35.2% மாடுகளும், 47 % ஆடுகளும் உண்டு. அதேவேளை 71.5% செம்மறி ஆடுகளும் தமிழீழத்தில் உண்டு (தமிழீழத்தில் 21,100, இலங்கைத்தீவில் 29,500)

தமிழீழத்தில் நாளொன்றிற்கு 1,73,955 லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஆனால் 3,21,020 லீற்றர் பால் நாளொன்றிற்குத் தேவை. கால்நடை வளர்ப்புகள் போன்றவற்றிற்கு ஊக்கமளித்தால் இத்தேவையைத் தமிழீழத்தில் சுலபமாக நிறைவு செய்ய முடியும்.

தமிழீழத்தில் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 1.92 கிலோ மாட்டிறைச்சி என்ற கணக்கில் 4402.5 மெற்றிக் தொன் இறைச்சி தேவைப்படுகின்றது.

ஆனால் ஆண்டொன்றிற்கு உற்பத்தி செய்யப்படும் மாட்டிறைச்சி 4821.3மெற்றிக்தொன்னாக இருக்கின்றது. இதில் கூடுதலான பங்கு தமிழீழத்திற்கு வெளியே கொண்டு செல்லப்படுகின்றன.

மூலிகைகளைப் பொறுத்தவரை சிங்கள அரசு 130 மூலிகைகளை இறக்குமதி செய்ய ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 100க்கு மேற்பட்டவை தமிழீழத்தில் உற்பத்தி செய்யப்படக் கூடியவையே.

ஒல்லாந்தர் காலத்தில் இத்தீவு கொழும்பு கொமாண்டரி, காலிக் கொமாண்டரி, யாழ்ப்பாணக் கொமாண்டரி என மூன்றாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கொமாண்டரி தமிழீழத்தின் பெரும் பகுதியை உள்ளடக்கியிருந்தது.

அவர்கள் காலத்தில் யாழ்ப்பாணம் கொமாண்டரியின் வருமானம் செலவிலும் பார்க்க அதிகமாக இருந்தது.

வருமானம் 2,00,000 - 2,90,000 டச்சு புளோரின்களாகவும், செலவு 93,000 - 2,00,000 டச்சு புளோரின்களாகவும் இருந்தது. இது மற்றைய கொமாண்டரிகளிலும் பார்க்க வருமானத்தை அதிகமாகக் கொண்டிருந்தது என்ற தரவு குறிப்பிடத்தக்கது.

இப் போராட்ட சூழ்நிலையிலும், கிடைக்கக்கூடிய மிகக் குறைந்த வசதிகளைக் கொண்டு செய்யப்பட்ட இந்த ஆய்வுகள் தமிழீழ வளம் தொடர்பாக நம்பிக்கையூட்டக்கூடிய தகவல்களைத் தந்திருக்கின்றது.

இத்தகைய ஆய்வுகள் வரவேற்கப்பட வேண்டியவை ஆகும்.

www.eelamview.com

# ஊதைகள்

## 1984 - திருக்கோணமலை கிராமம் ஒன்றில்...

மழைக் காலம் வானம் இருண்டிருந்தது கடலிற்குள் இருந்து வரும் காற்றை, கிராமமும், கிராமத்தில் எழுந்து நிற்கும் மரங்களும் தடுத்து விட்டாலும், அதில் எஞ்சி- கரைச்சிக்குள் புத்துணர்வு பெற்று வீசும் உப்புக்காற்றும், காட்டில் எழுந்து, குளத்து வயலில் குளிர்மை பெற்று வீசும் தென்றலும் நடு வயலிற்குள் நின்ற செல்வராசா அண்ணையைத் தடவிக் கொண்டிருந்தன,

அந்தச்சேத்தடிப்புத் தரைக்குள் செல்வராசா அண்ணையும், அவரின் பிள்ளைகள் போன்ற எருத்து மாடுகளும் கடுமையாகஉழைத்துக்கொண்டிருந்தார்கள். கலப்பையின் முனையுடன் நாணயக் கயிறுகளை பிடித்தபடியே கலப்பையை மாடுகளின் கால்களுக்குள் சென்றுவிடாமல் அசைத்துக் கொண்டிருந்தார் செல்வராசா அண்ணை. மாட்டு மூவு என்பதே கஸ்டமான வேலைதான்.

ஆனால் செல்வராசா அண்ணைக்கு அது பிறவியிற் பழக்கம்.

ஒரு பெருமூச்சு விட்டபடியே, நெற்றியில் துளிர்த்த சின்ன வியர்வையை வழித்தபடி நிமிர்ந்து பார்த்தார் செல்வராசா அண்ணை.

தூரத்தில், காட்டிலிருந்து வெளிக்கிட்ட ஓர் மனித உருவம் வரம்பில் நடந்து வந்து கொண்டிருந்தது. மேகம் மறைத்திருந்த அந்த பகற் பொழுதில் அவனைத் தெளிவாகத் தெரியவில்லை, என்றாலும் தொடர்ந்து உழுவதற்கு செல்வராசருக்கு மனம் வரவில்லை. அவருக்குத் தெரியும் வருபவன் தன்னிடம்தான் வருவான் என்று. வருபவன் வரட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தார் பச்சை பெனியனும், அழுக்குச் சாறமும் - கலைந்த தலையும் காட்டிலிருந்து வரும் அந்தப் போராளியை அடையாளம் காட்டியது.

''வாடாப்பா நாதன், என்ன விசயம்'' என்றார் செல்வராசர்.

---

சிறுகதை

---

''இங்கை வாங்கோ அண்ணை, என்னால சேத்துக்க இறங்கேலாது'' என்றான், முகத்தைச் சுளித்தபடியே நாதன்.

''சேறோடா, இந்தச் சேத்துக்கத் தான் உங்களுக்கு சோறு விளையுது தெரியுமே'' என்றபடியே வரம்பில் வந்து ஏறினார் செல்வராசர்.

''அண்ணை இண்டையோட சாப்பாட்டுச் சாமான் ஒண்டுமில்லை, விடிஞ்சாப் பட்டினிதான்'' என்றான் நாதன், அவனது உருண்டைக் கண்களும் அந்தக் கதையை அப்படியே சொல்லியது.

''அப்ப, இப்ப நாங்கள் என்ன செய்யிறது'' என்றபடியே மாடுகளைப் பார்த்து ''இங்க வா'' என்று அதட்டினார் செல்வராசா அண்ணை.

'' இருட்டுறதுக் கிடையில ஊருக்கை போய் சாமானை எத்தியந்து தவக்களை அம்மான்ர இடத்தில போடுவம்'' என்றான் நாதன். கலப்பையை கழட்டி, வயல் வரம்புடன் வைத்துவிட்டு, மாடுகளை கொண்டு வீதிக்கு வந்தார் செல்வராசா அண்ணை. அவரின் வண்டில் ஒரு மரத்தின் நிழலில் முகங் குத்திக்கிடந்தது.

O O O

செல்வராசர் எப்பவுமே இப்படித்தான், எங்க நின்றாலும், என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், போராளிகளை கண்டவுடன் அந்த வேலைகளை அப்படி, அப்படியே விட்டுவிடுவார். அவர்களின் தேவைகளை— வேலைகளை செய்த பின்புதான் சாப்பிடுவதென்றாலும், அது அவரின் இயல்பாகப் போய்விட்டது. மண்ணையும், மண்ணிற்காக போராடுகின்ற போராளிகளையும் மனதார நேசிக்கும் செல்வராசருக்கு நாற்பத்தேழு வயதிலும் தானும் ஓர் போராளியாக மாற வேணுமென்ற ஆசையிருந்தது. இல்லாட்டியும் என்ன, அவரும் ஒரு போராளிதான்.

மாட்டு வண்டில், சாமான் மூடைகளும்— வாழைக்குலைகளுமாக நிறைந்து போயிருந்தது. மூடைகளுக்கு மேலே உயரத்தில் நாதன் இருந்தான். இடைக்கிடை அவனது கை வாழைக்குலைக்கு கிட்டப் போய் வந்தது. செல்வராசா அண்ணை திரும்பிப் பார்க்கும் போதெல்லாம் வேறெங்கயோ பார்த்தான் மற்றும் படி ஒவ்வொரு வாழைப்பழமாக அவன் வாயிற்குள் போய்க் கொண்டிருந்தது.

''தம்பி, நாதன், உன்ர கறுப்புப் போகாதடாப்பா, ஆனா, ஒழுங்கா குளிச்சு, முழுகி வந்தா, உந்த முகத்தில கிடக்கிற பருக்களாவது போகுமடா'' என்றார் செல்வராசர்

''அண்ணை, நான் ஒழுங்கா குளிக்கிறனான்'' என்று பச்சைப் பொய்யை குரலை உயர்த்திக் கொண்டே சொன்னான் நாதன்.

செல்வராசா அண்ணை சாதுவாகச் சிரித்துக் கொண்டே, வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் கைகள் நாணயக் கயிற்றை சுண்டிக் கொண்டிருந்தது. கிராமத்துச் சனங்கள் சிலர் இவர்களைப் பார்த்தும் பாராதது போல ஏதோ வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

''போன முறை ஆமிக்காரன்வந்தபோலை;காட்டுக்கை ஓடின சனம் இப்ப தான் திரும்ப வந்திருக்கு. ஆக்கள் இல்லாமல் ஊரே கூட காடு வத்திப் போச்சுது'' என்று சலித்துக் கொண்டார் செல்வராசர்.

சாதுவாக இருட்டத் தொடங்கியது. செல்வராசரின் மனதில் சின்னதாக ஒரு அச்சம் தோன்றி மறைந்தது.

'' இருட்டினால் சதுப்புக்குளால போகவும் ஏலாது, கரைச்சிக்க தண்ணியும் நிக்குது. அங்கால காட்டுக் குறையிக்கை உந்த அறுவாங்கள் வந்து படுக்கிறாங்களோ தெரியாது. வேகமாக போங்கோடா'' என்று குனிந்து மாடுகளின் முதுகில் கைகளால் அடித்தார் செல்வராசர்.

'' ஓமண்ணை உந்த மட்டக்களப்பும் பக்கத்தில, வயல்களுக்கை வச்சுத் தான் திறையப்பேரைச் சுட்டுப் போட்டாங்களாம்'' என்றான் அடைத்த குரலில் நாதன்.

''பாரடா தம்பி, வயலுக்கையும், போகேக்கையும், வரேக்கையும், பங்கக்கையும் மனுசர் எப்படி எல்லாம் சாகுறாங்கள். வீடு, வாசல், மனுசி, பிள்ளைகள் எல்லாம் இருந்தும் என்ன பலன், அங்கங்க போட்டு எரிச்சுப் போட்டுப் போறாங்கள். தமிழனா பிறந்தவனுக்கு இது வாழ்க்கையாய்ப்போயிட்டுது'' என்று முணுமுணுத்தார் செல்வராசர்.

'' ஓமண்ணை, முந்துலில கந்தாரையும், சிங்கக்குட்டி, நல்லதம்பி ஆக்களையும், இங்கை, கட்டுப் போட்டு ஜீப்பில கட்டி இழுத்தவன்கள். பிறகு திருக்கோணமலை டவுனுக்கு கொண்டு போய் மனுசி பிள்ளைகளெல்லாம் கதறக், கதற கண்ணுக்கு முன்னுக்குப் போட்டு எரிக்கேலையே. எல்லாத்துக்கும் ஒரு முடிவு இருக்குது'' என்றபடி மௌனமாகி விட்டான் நாதன். சதுப்பிற்குள்ளால் பாதை விலகாமல் வண்டிக் கரைச்சியை தாண்டியிருந்தது. வயல் வெளிகளிற் கிடையால் ஓடும் ஒற்றையடிப் பாதையில், மாடுகள் இரண்டும் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. மாட்டின் சலங்கை ஒலி அந்த மாலை நேரத்து அமைதிக்கு பயங்கலந்த இனிமையைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

தவக்களை அம்மானின் காவல் நிலையத்தில் வண்டில் போய் நின்றதும், போராளிகள் வேகவேகமாக சாமான்களை இறக்கினார்கள். செல்வராசா அண்ணையின் வயல் - பக்கத்தில், கூப்பிடு தூரம் தான். வண்டிலை ஓரமாக இழுத்துச் சென்றவர், மாடுகளை அவிழ்த்து தன்பாட்டுக்குபோகவிட்டார்.

'' வயல் பக்கம் போகாம தண்ணியைக் குடிச்சுப் போட்டு, வாய்க்கால் கரையில் நில்லுங்கோ'' என்றபடி வண்டிலைச் சாய்த்தார் செல்வராசர்.

''அண்ணை மாடுகளோடை வாழும் வாரப்பாடு தான் என்றான்'' ஒரு தோழன்.

'' எடே, அதுகள் அங்க வருசமா என்னோட நிக்குதுகள். என்ர பேச்சை மட்டுமில்ல என்ர உணர்வுகளையும் அதுகள் விளங்கிக் கொள்ளும். இவன் நாதனைக் கண்டா அவைக்கு வருற சந்தோசம் தெரியுமே ஆமிக்காரங்களைக் கண்டா மிரளுற மிரளலும், எங்கட பெடியங்களைக் கண்டா உரசலும், சேட்டையும்... என்னைப் பொறுத்தவரை இதுகள் தான்ரா என்ர பிள்ளைகள்'' செல்வராசர் மாடுகளைப் பார்க்கப்போய்க் கொண்டிருந்தார்.

ஒரு தோழன் சொன்னான். '' செல்வராசாண்ணையின்ர மாடுகளுக்கிருக்கிற உணர்வு மனுசருக்கிருந்தா, நாளைக்கே தமிழீழம் இடைச்சாலும் இடைக்கும்'' எல்லாப் போராளிகளும் வாய்விட்டுச் சிரித்தார்கள். அவர்களின் சிரிப்புடனேயே, சூரியன் வானில் எழாத அன்றையபொழுது சாய்ந்தது.

O O O

வயல் வரம்பில் செல்வராசா அண்ணை நின்றார். வானம் களங்கமற்று இருந்தது. இளஞ்சூரியன் எழப் போவதை அறிவித்தான், மெல்லிய குளிர் காற்று செல்வராசா அண்ணையின் நெஞ்சில் மெதுவாகிஅடித்து நோகப்பண்ணிக் கொண்டிருந்தது. வயல் வரம்பில் நின்று, விளைந்த வயலைப் பார்த்துக் கொண்டிருந்தார் செல்வராசர். இப்பொழுது அவர் ஊருக்குள் போவதையும் விட்டுவிட்டார். பக்கத்து ஊர்ப் பாலத்தடியில் இராணுவத்தினர் முகாமமைத்த பின் அவர் ஊருக்குள் போவதில்லை.

'' இரண்டு பெடியளும் வளர்ந்திட்டாங்கள் பெட்டை ஒன்றுதான். அவளும் வளர்ந்திட்டாள்.வர, வர வடிவாயும் வாறாள் அவளின்ர பிரச்சனையையும் முடிச்சிட்டா, எங்கையும், ஆறுதலாகச் சாயலாம்'' என செல்வராசரின் மனம் பாடியது. அந்த நேரம் தான் நாதனும், நடேசனும் வந்தனர். நடேசன் செல்வராசரின் மனைவியின் உறவு முறையால் அவருக்கு மச்சான் முறையாக இருக்க வேண்டும்.

'' செல்வராசா அண்ணை, ஆளைப் பார்க்க பயங்கரவாதி மாதிரிக் கிடக்குது.

இண்டைக்கு ஊருக்கை வாங்கோ, நான் சேர்த்து வழிச்சு விடுறன்'' என சொல்லிக் கொண்டே நெற்கதிர் ஒன்றை உருவி வாயிற்குள் போட்டான் நாதன்.

செல்வராசர் மெதுவாகச் சிரித்தார். கிராமத்திற்கு போக அவருக்கும் மனமாகத்தான் இருந்தது. அந்த நேரம் தான் வீதியால் ஓடி வந்த இருவர், இராணுவத்தினர் மேல்க்காட்டுப் பக்கமாகப் போகிறார்கள் என சொல்லி விட்டுச் சென்றனர்.

'' அண்ணை, அந்தப் பக்கமாகவும் எங்கட பெடியள் நிக்கிறாங்கள், அவங்களுக்குத் தெரியப்படுத்த வேணும்'' என சொல்லிக் கொண்டே நாதனும், நடேசனும் ஓடினார்கள்.

அவன் இந்தப் பக்கமா வரமாட்டான் என சொல்லிக் கொண்டே வரம்பில் நடந்தார் செல்வராசர். மாடுகளின் கட்டை அவிழ்த்தார்.

மாடுகள் மிரளத் தொடங்கின.

செல்வராசர் நிமிர்ந்து பார்த்தார்......

வரிசை, வரிசையாக வயல் வெளி எங்கும் இராணுவத்தினர்.

செல்வராசர் வயலுக்குள் பாய்ந்தார் பற்றைக்குள் ஓடிவிட்டால், அதற்கப்பால் மறைந்து கொண்டே ஓடிவிடலாம். அதே நேரம் இராணுவத்தினரின் துப்பாக்கி ரவைகள் ஏராளமாக செல்வராசாண்ணையைத் தேடிப் பறந்தன. செல்வராசர் பற்றைக்குள் பாய்ந்தார்.



வயல் வெளி எங்கும் வேலை செய்து கொண்டிருந்த தமிழர்களை தேடித் தேடி இராணுவத்தினரின் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டிருந்தன. அந்த விளைந்த வயல் நிலங்கள் இரத்தத்தால் கறைபடிந்தன.

O O O

இரண்டு நாட்கள் கழிந்தன, முருகேசன் வயல் வெளி பக்கமாக வந்தான். வயல்வெளியில் நடந்தகோரச் சம்பவத்தை அவனால் மறக்க முடியாமல் இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு தான் இந்த வயல் வெளியில் மூன்று மனிதர்களை இழந்து அந்தக் கிராமம், தவித்தது வெள்ளையன் கிழி, தருமன் ஆகிய மூன்று இளைஞர்களும், இந்த வயல் வெளிக்குள் தான் உயிரற்ற சடலங்களாக......

முருகேசன் வரம்புகளின் மேலால் தொடர்ந்து நடந்தான்.


செல்வராசா அண்ணையின் வயல், வயலுக்குப் பின்னாலிருந்த பற்றை, பற்றைக்கு அருகில் செல்வராசா அண்ணையின் மாடுகள் இரண்டும் பிணைக்காமல் நின்றன.

(11 ஆம் பக்கம் பார்க்க )

www.eelamview.com

# மக்களுடன் புலிகள்

## பூம்புகார் - கிராம மேம்பாட்டுத் திட்டம்



தமிழீழத்தில் பலதரப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். எமது மக்களின் வாழ்விடங்கள் நகரம், கிராமம் குறிச்சி என வகைப்படுத்தப்படுகிறது. இவைகள் ஒன்றுக்கு ஒன்று சமனான வளர்ச்சி அடைந்தவையும் இல்லை. சமுதாயத்தில் சமனாக கணிக்கப்படுபவையும் இல்லை. தமிழ் சமுதாயத்தின் சமூக வடிவம் பல முரண்பாடுகளைக் கொண்டது. சமூக வர்க்க வேறுபாடுகளையும், சமூக ஏற்றத் தாழ்வுகளையும், சாதிய முரண்பாடுகளையும் கொண்டதாய் அமையப்பெற்றது. அப்படிப்பட்டதொரு நிலையிலேயே இன்றைய சமூக வாழ்வு இருக்கிறது.

தமிழீழத்தின் வளங்கள் பொதுவாக ஒன்றுதான். மனிதர்களும் ஒரே இனத்தோர்களாகவே இருக்கிறார்கள், ஆனால் சமூக ஒடுக்குமுறை – பொருளாதார ஒடுக்குமுறை காரணமாக ஒரு பகுதி மக்கள் முன்னேற முடியாதபடி — தங்கள் வாழ்வு நிலைகளை உறுதிப்படுத்த முடியாமல் ஒதுக்கப்பட்டார்கள்.

இத்தகைய மக்கள் கல்வி வாய்ப்பை இழந்து, பொருளாதாரத்தில் பின்தங்கி சமூகத்தின் கீழ்மட்டத்திற்கு தள்ளப்பட்டார்கள்.

இப்படியாக ஒடுக்கப்பட்ட, சமூக அந்தஸ்துக் குறைந்த மக்கள் வெளிப்படையாக சிற்ற குடிசைகளையும், குடிநீர் - போக்குவரத்து வசதியற்ற வாழ்விடத்தையும் கொண்டிருந்தனர். கந்தல் உடையுடனும், பரட்டைத் தலையுடனும் கல்வியறிவற்று இந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இன்று தமிழீழத்தின் ஒரு பகுதி மக்கள் இவ்வாறாக அல்லது இதில் சிறிது வித்தியாசத்துடன் வாழ்கிறார்கள். ஆனால், இந்த மக்கள் தான் இந்த மண்ணின் ஆணிவேராகப் பாய்ந்து நிற்கிறார்கள். இந்த மண்ணுடன் பிரிக்க முடியாமல் பிணைக்கப்பட்டுள்ளார்கள். எத்தகைய சூழலிலும் தங்கள் மண்ணைவிட்டு ஓடாமல், வாழ்ந்தாலும், வீழ்ந்தாலும் இந்த மண்ணிற்கு பசளையாகவே இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள்.

இந்த மக்களின் பலத்தை பலவீனத்தை, இவர்களின் நிலையை எமது இயக்கம் நீண்ட அரசியல், சமூக, பொருளாதார ஆய்வுகளுக் கூடாகவும் அனுபவங்களுக் கூடாகவும் உணர்ந்துள்ளது.

இந்த மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை என்பதே எமது தேசத்தின் முழுமையான விடுதலை என்பதை ஏற்றுக் கொண்டு எமது இயக்கம் இதற்கான அரசியற் செயற்றிட்டங்களை முன்வைக்கிறது. இப்படிப்பட்ட பல செயற்பாடுகளை இன்று நாம் ஆரம்பித்துள்ளோம். முதலாவதாக யாழ்நகரத்தை அண்டியுள்ள அரியாலைப் பகுதியில் இருக்கின்ற பூம்புகார் கிராமத்தில், எமது அரசியற் செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தினோம்.

பூம்புகார் கிராமம், ஓர் புதைமணல் வீதியில் ஆரம்பித்து, அவ்வீதியின் முடிவுடன் முடிகிறது ஒரு புறத்தே கடலை எல்லையாகக் கொண்டு நிற்கும், அந்தக் கிராமத்தின் வளமாகக் கடலும், தென்னைகளும், பனைகளும் இருக்கின்றன. மற்றும்படி மணல் நிறைந்த பூமி. பெருமளவிலான மூலதனமற்ற கூலித்தொழிலாளர்களையும், சிறியளவிலான கடற்றொழிலாளரையும், கொண்டு அந்தக்கிராமம் இருக்கின்றது.

பூம்புகார் கிராமத்திலுள்ள பிள்ளைகளில் பலர் பாடசாலைக்குச் செல்வதில்லை. பாடசாலைக்குச் செல்பவர்களிலும் பெரும்பாலானவர்கள் பள்ளிப் படிப்பை இடைநடுவில் விட்டுவிடுவார்கள். இதற்குக் காரணம் - பாடசாலை, கிராமத்திலிருந்து 3 மைல் தூரத்தில் இருந்தது. போக்குவரத்து வசதி இவர்களுக்கு முற்றாக இருக்கவில்லை. வைத்தியசாலை 8 மைல் தொலைவில் இருந்தது. இதற்கெல்லாம் மேலாக, கிராமத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரையுள்ள 1 கி மீற்றர் நீளமான வீதி புதைமணலாக இருந்தது. இந்தப் புதைமணல் வீதியில் நடப்பதற்கு இந்தக் கிராமத்தவர்கள் பெரிதும் சிரமப்பட்டார்கள்.

பூம்புகார் கிராமத்தவர்கள். பொதுவாக வறுமையில் வாடினார்கள். கடல் அருகில் இருந்தது. ஆனால் தொழில் செய்யக்கூடிய உபகரண வசதிகள் அவர்களிடம் இல்லை, அவற்றைப் பெறுவதற்குரிய பணவசதியும் இல்லை, வலை இன்றி மீன்பிடிக்க முடியாது அதே மாதிரித்தான் மற்றத் தொழிலாளர்களும் - நிரந்தரமற்ற கூலி வேலையையே செய்து வந்தனர்.

வேலையற்ற நாட்களெல்லாம் இவர்கள் எல்லாருமே பட்டினியால் வாடவேண்டி இருந்தது.

இந்தக் கிராமத்தைப் பார்த்ததுமே, இங்கு வாழும் அறியாமை இருளை நீக்க வேண்டும் என்றும், இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அவர்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும், எமது இயக்கம் முடிவெடுத்தது. இதற்காக செல்வி. மிதுலாவின் தலைமையில் விடுதலைப்புலிகள் மகளிர் அணியினரின் ஒரு குழு அங்கு முகாமிட்டது.

எமது மகளிர் அணியினர், அந்தக் கிராமத்தின் அடிப்படைத் தேவைகளை கவனித்து நிவர்த்தி செய்யத் தொடங்கினார்கள். அவர்கள், உடனடியாகக் கிராமத்தின் மணல் வீதியைச் செப்பனிடத் தொடங்கினார்கள். பெருமளவு அந்தக் கிராமத்தவரின் பங்களிப்போடு அந்த வீதி மிக விரைவாகச் செப்பனிடப்பட்டது. இன்று சகல வாகனங்களும் வந்து செல்லக்கூடிய வீதி ஒன்று அந்தக் கிராமத்தவர்களுக்கு உண்டு. அதேநேரம், மருத்துவ வசதிக்காக ஒரு முதலுதவிச் சிகிச்சை நிலையத்தையும், மேலதிக விலை கொடுப்பதைத் தவிர்ப்பதற்காகவும், மக்கள் சுரண்டப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், ஓர் மக்கள் கடையையும் எம்மவர்கள், அமைத்துள்ளார்கள். அவர்களின் பிரதான வேலைத் திட்டமாக, வருங்கால சந்ததியின் வளர்ச்சியை இலக்காகக் கொண்டு பள்ளிக்கூடம் அமைப்பதையும், அங்கு வாழும் மக்களின் வளர்ச்சியை இலக்காகக் கொண்டு தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதையுமே வகுத்திருந்தனர்.

அந்த வகையில், இன்று 5-ம் ஆண்டுவரையானதொரு பள்ளிக்கூடம் சிறந்த கட்டட வசதிகளுடன் இங்கு எழுந்துள்ளது. இதனால இக்கிராமத்து மாணவர்கள் தங்கள் கிராமத்திலேயே சிரமமின்றித் தொடர்ந்து கல்வியைக் கற்கும் வசதி ஏற்பட்டுள்ளது.

### பூம்புகார் கிராம விபரம்

| | | |
|---|---|---|
| 1. | குடும்ப எண்ணிக்கை | 172. |
| 2. | மக்கள் தொகை | 744. |
| | ஆண் | 374. |
| | பெண் | 370. |
| 3. | ஓரளவு படித்தவர்கள் | 23. |
| 4. | பாடசாலை | 3 மைல் தூரத்தில் |
| 5. | பாடசாலை செல்லும் மாணவர்கள் | 183. |
| 6. | கல்வி கற்கும் வயதிலும் பாடசாலை செல்லாதவர்கள் | 34. |
| 7. | வைத்தியசாலை | 8 மைல் தூரத்தில் |
| 8. | குடிநீர்க் கிணறு இல்லாதவர்கள் | 53 குடும்பம் |
| 9 | மலசலகூடமில்லாதவர்கள் | 93 குடும்பம் |
| 10. | நிலமற்றவர்கள் | 43 குடும்பம் |
| 11. | நிரந்தர வேலைவாய்ப்பு உள்ளவர்கள் | 6. |
| 12 | நிரந்தர வேலைவாய்ப்பு அற்றவர்கள் | 299. |

ஒரு கிராமத்தின் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு, தொழில்வாய்ப்பு அவசியமானது. அந்த வகையில் அக்கிராமத்தின் மூலவளங்களை அடையாளங்கண்டு, அதற்கேற்ற தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவது அவசியமாகும்.

பூம்புகார் கிராமத்தைப் பொறுத்தவரை அருகில் கடல் இருக்கிறது. கடல் தொழிலுக்குரிய வசதிகளைச் செய்து கொடுத்தால், இக்கிராமத்தின் ஒரு பகுதியினர் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். ஆகவே இதற்குரிய முன்னேற்பாடுகளை எமது மகளிர் அணியினர் செய்து வருகின்றார்கள். இதே போன்று, இங்கு தென்னைகள் நிறைய நிற்கின்றன, எனவே, இங்கு ஓர் தும்புத் தொழிற்சாலையை எம்மவர்கள் அமைத்துள்ளார்கள். இத் தொழிற்சாலையில் ஆண்களும், பெண்களுமாக ஐம்பது பேர்வரை வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். இவற்றுடன், பெண்களுக்கென முப்பது பேருக்கு பன்னை வேலைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது மேலும் இக்கிராமத்தில் உள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும், பல கைத்தொழில்களை பயிற்றுவிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பூம்புகார் கிராமம், தன் விடிவை நோக்கிய பாதையில் இப்போது நடக்கத் தொடங்கி உள்ளது.

இவ் வேலைத்திட்டத்தை நிர்வகிக்கும் செல்வி. மிதுலா, குறிப்பிடுகையில் "பூம்புகார் கிராமத்தில் நாம் பல வேலைத்திட்டங்களை செய்துள்ளோம், ஆனால், இந்த வேலைத்திட்டங்களைச் செய்ததனால் இந்தக்கிராமத்தின் அவலநிலை மாறிவிட்டது என்றில்லை. உண்மையில் சொல்வதானால், இந்தக் கிராமம் முன்னேறுவதற்குரிய வேலைத்திட்டங்களை இப்போதுதான் ஆரம்பித்துள்ளோம், எங்கள் இலக்கு இன்னும் தொலைவில் இருக்கிறது. இனிமேல் தான், இந்தக் கிராம முன்னேற்றத் திட்டம், இடையூறுகளையும் சிரமங்களையும் சந்திக்க வேண்டிவரும் அதற்கு உள்ளாகவும் முன்னேறுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இக் கிராம மக்களின் ஆர்வம், கடின உழைப்பு, முன்னேற வேண்டும் என்ற உறுதி அந்த நம்பிக்கையை எங்களுக்குத் தருகிறது". என்றார்.

பூம்புகார் கிராமத்து மக்கள் தமது முன்னேற்றத்திற்காக எம் மகளிர் அணியினருடன் இணைந்து நின்று கடுமையாக உழைக்கிறார்கள். நிறைந்த பங்களிப்புக்களைச் செய்கிறார்கள். அந்தக் கிராமத்தை மலர்ச்சியடையச் செய்துவிட முடியும் என்று அந்த மக்களுடன் சேர்ந்து நின்று, எம் மகளிர் அணியினர் உறுதி கூறுகின்றனர்.

www.eelamview.com

# கருத்தோவியங்கள் பேசுகின்றன


**அண்மைக் காலத்தில் எமது இயக்கத்தால் வெளியிடப்பட்ட கருத்துப்படங்களில் சில...**



சிறீலங்கா அரச தமிழர்கள்மீது விதித்த பொருளாதாரத் தடையின் கொடுமையை சித்தரிக்கும் கருத்துப் படம்



பெண்கள் மீதான அடக்குமுறைகளையும், பெண்கள் விழித்தெழ வேண்டிய அவசியத்தையும் விபரித்து மகளிர் முன்னணியினரால் வெளியிடப்பட்டது.




பொருளாதார யுத்தத்தை எதிர்த்து நிற்கும் தமிழீழ மக்களின் உற்பத்திப் போரார்ட்டத்தை குறிக்கும் கருத்தோவியம்

## விதைகள்...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'' ஏன் இதுகள் அழுது கொண்டு நிக்குதுகள். பிணைக்கவுமில்லை, ஊருக்கையும் வராம?'' என்று கேட்டுக் கொண்டே, மாடுகளின் கயிற்றை எடுத்து இழுத்தான் முருகேசன். மாடுகள் ஏக்கத்தோடு அந்தப் பத்தையைப் பார்த்தன. சாதுவான மணம் வீசியது, ரத்த வாடைதான்... முருகேசன் பற்றையின் விளிம்பிற்குச் சென்றான். காய்ந்து உலர்ந்து போய் மனித இரத்தம்........, முருகேசனுக்கு பயமாக இருந்தது. பற்றையை விலக்கி விட்டுப் பார்த்தான். செல்வராசா அண்ணை........, திரும்பிப் பார்த்தான்,

எருதுகள் இரண்டும் நின்றன. அவனுக்கு விளங்கியது. செல்வராசா அண்ணையை பார்த்துக் கொண்டு அவர் வருவார் என்றுதான் இதுகளும் விலகாமல் நிக்குதுகள், அவரில் உயிரையே இந்த மாடுகள் வைச்சிட்டுதுகள். ஊரவர்கள் மனமள வென்று திரண்டனர்.

'டேய் விறகு தறி. அதுளவிக் கொண்டு போகேலாது'' என்றான் ஒருவன். இந்த மண்ணின்ர மரணங்கள் மாதிரித்தான், செல்வராசரும் அநாதைப் பிணமாக அங்கேயே எரியப்போகிறார். '' மகன் நிக்கிறானோ?'' என்றார் கிழவர் ஒருவர் ''ஓமோம்.''

'' அவனைக் கொள்ளியை போடச் சொல்லுங்கோ'' என்றபடியே விலகினார் கிழவர். மாடுகள் இரண்டும் தன்பாட்டிற்கு நடக்கத் தொடங்கின.

'' அதுகளை கலவரப்படுத்தாம விடுங்கோ'' என்றார் கிழவர். மாடுகள் வயலுக்கை இறங்கி காட்டை நோக்கி நடக்கத் தொடங்கின. தூரத்தில், காட்டிலிருந்து வெளிப்பட்டு வரம்புகளில் நாதன் வந்து கொண்டிருந்தான்.

O O O

திருக்கோணமலையில் உள்ள தமிழ் கிராமம் ஒன்றில் நடந்த உண்மைச் சம்பவங்களை அடித்தளமாக கொண்ட சிறுகதை

## ஒரு முற்றுகைப் போர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்றுகைப்போர் தொடங்கிய 20மணிநேரத்தின் பின்னர் இராணுவத்தளத்தின் ஒரு பகுதியாகிய உல்லாசவிடுதி முகாமை தாக்கி படையினரை விரட்டி அதைக்கைப்பற்றிவிட்டோம்.

இந்த முகாம் தகர்ப்பில் 27 புலிகள் களப்பலியானார்கள்.

அதன்பின்னர் முறையே 14-ம் 16-ம் திகதிகளில் தடைமுகாம், உப்பள அலுவலக முகாம் ஆகியவற்றைத் தாக்கி சில காவல் அரண்களையும் கைப்பற்றினோம். இருந்தாலும் பூரணவெற்றியை நாம் பெற்றிருக்கவில்லை.

14-ம் திகதி தடைமுகாம் தாக்குதலில் 62 புலிகள் வீரமரணமடைந்தனர்.

16-ம் திகதி உப்பள அலுவலக முகாம் தாக்குதலில் 25 புலிகள் மண்ணில் விதையாக வீழ்ந்துள்ளனர்.

முற்றுகைப்போர் இவ்விதம் நடந்து கொண்டிருக்கையில் 14 ம் திகதி மாலை 5.00 மணியளவில் அதாவது முற்றுகை தொடங்கி 97 - வது மணி நேரத்தில் ஆனையிறவு முகாமுக்குத் துணை செய்வதற்காக கடலிலிருந்து படையினர் தரையிறக்கப்பட்டனர்.

ஆனையிறவு இராணுவ தளத்திலிருந்து வட - கிழக்குத் திசையாக சுமார் 6 மைல் தொலைவில் உள்ள வெற்றிலைக்கேணி என்ற கடற்கரைக் கிராமத்தில் 1000 ற்கும் மேற்பட்ட படையினர் படகுகள் மூலம் தரையிறக்கப்பட்டனர். இந்தத் தொகை 3000 என சிறீலங்கா அரசு கூறியிருந்தது.

விமானங்கள், உலங்கு வானூர்திகள், மற்றும் கடலிலிருந்து ஏவப்படும் பீரங்கிக் குண்டுகள் பக்கத் துணையுடன் இத்தரையிறக்கம் நடந்தது.

இத்தரையிறக்கத்தைத் தொடர்ந்து ஆனையிறவுப் போர் விரிவாக்கம் கண்டுவிட்டது.

கவச வாகனங்கள் உட்பட பலரக வாகனங்களுடன் தரையிறக்கப்பட்ட படைகள் ஆனையிறவு நோக்கி நகராதவாறு கட்டைக்காட்டுப் பகுதியில் பெரும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இதுவரை சிங்களப்படைகளுடன் நடந்த சண்டைகள் எல்லாவற்றையும் விட ஆனையிறவுப்போர் இராணுவபரிமாணத்தில் வேறுபட்டிருப்பதைப் போல அரசியல் பரிமாணத்திலும் வேறுபட்டிருக்கிறது.

ஆனையிறவுப் போருடன் மக்கள் எழுச்சியும் சேர்ந்து கொண்டிருப்பது ஒரு பிரதான விடயமாகும்.

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், மருத்துவ ஊழியர்கள், ஆகியோர் உட்பட ஊர்மக்களில் பெருந்திரளானோர் இப்போரில் தங்களது பங்களிப்புக்களை உற்சாகத்துடன் வழங்கிக்கொண்டிருக்கின்றனர்.

இது புலி வீரர்களுக்கும் மகிழ்ச்சியை அளித்திருப்பது [illegible] வேகத்தையும், உறுதியையும் அதிகரித்துள்ளது எனலாம்.

பகலிலும், இரவுவேளைகளிலும் வீதிகளில் நின்றபடி போக்குவரத்துக்களை ஒழுங்கு செய்வதும், போர் விமானங்களினதும் - உலங்குவானூர்திகளினதும் பறப்புக்களை வாகனசாரதிகளுக்கு அடையாளம் காட்டுதல் உட்பட இரத்ததானம், உலர் உணவு சேகரித்தல், மருத்துவ வேலைகளில் ஈடுபடுதல், போருக்கு வேண்டிய அவசர உதவிகளை சேகரித்துக்கொடுத்தல் போன்ற போர்க்கால வேலைகளை மக்கள் பொறுப்புணர்ச்சியுடனும், இதயபூர்வமாகவும் செய்து வருகின்றார்கள். மொத்தத்தில் இந்த ஆனையிறவுப் போர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தப்போகும் வரலாற்று நிகழ்வாக அமையப் போகின்றது எனலாம்.

வடதமிழீழ மக்கள் மத்தியில் பாரிய எழுச்சியை ஏற்படுத்தியதைப்போன்று ஆனையிறவுப் போர் சர்வதேச மட்டத்திலும் கூர்ந்து அவதானிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

www.eelamview.com



சியால்
( இ. கிங்ஸிலி ஜோசப்)
யாழ்ப்பாணம்



பரன்
( சி. அன்பழகன்
மாங்குளம்



மாணிக்கதாஸ்
( ரா. நாகேந்திரன் )
வவுனியா



கௌசலன்
( ச. நாகேஸ்வரன் )
வவுனியா



காந்தன்
( க. பத்மநாதன் )
ஏறாலூர்



சித்திக்
( த. விக்னேஸ்வரன் )
தெனியம்பை



நிலாம்ஸ்
( க. வதீஸ்வரன் )
சங்கத்தானை



செந்தில்
( பா. செல்வகுமார் )
மருதோடை



பிந்துரன்
அ. லோகு ஜெராட்)
பேசாலை



குமார்
( ல. ராஜா )
மட்டக்களப்பு



தீபன்
( சா. தங்கேஸ்வரன் )
திருக்கோவில்




நியூட்டன்
( கு. சிவகுமார் )
நாவற்குழி

# வீர வணக்கம்

ஒருசில பெயர்கள் காலதாமதமாகக் கிடைத்ததால் இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.



மாயவன்
( ச. கனகசிங்கம் )
கொடிகாமம்



லோ
( சி. அமிர்தலிங்கம்)
ஒட்டுசுட்டான்



சுதன்
( செ. ஜேசுதாஸ் )
மன்னார்



நிசானா
( த. ஈஸ்வரி )
ஆலங்கேணி



சகாரா
( பொ. மகேஸ்வரி )
மட்டக்களப்பு



வகிர்தா
(சி. சிவந்தினி )
ஏழாலை



லோகா
( ச. கோமதி )
கிளிநொச்சி



ரமேஸ்
த. முத்துக்குமார்)
இளவாலை



கலிஸ்ரா
(ச. செந்தமிழ்ச்செல்வி)
நெடுங்கேணி



ஜமுனா
( தி. சீதாலட்சுமி)
வவுனியா



தபேஷா
( அ. மஞ்சளா )
நல்லூர்



ருபிகா
( அ. டயனி )
மன்னார்



அமராவதி
( பா. நளா )
மன்னார்



வாகினி
( க. தேவராணி )
வாளைச்சேனை

## 10.07.1991 அன்று ஆனையிறவு இராணுவத் தளம் மீதான முற்றுகையின் முதலாம் நாள் போரில் வீரமரணமடைந்தோர்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com